உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

தொகுதி 10	பிங்களஹு பங்குனிமீ	பகுதி 3.
Vol-X	April 1918.	No 3.

தேசியக் கல்விமுறையிற் சில திருத்தங்களும் உபாத்தியாயர்களும்.

தேசியவுணர்ச்சி தோன்றியிருக்கும் இந்தத் தருணத்திலேயே அந்த உணர்ச்சியை வலியுறுத்தவும், மற்றும் அதற்கு வேண்டிய ஸாதனங்களைச் செய்துகொடுக்கவும் நமது தேசியக் கல்விமுறையும் ஆரம்பிக்கப்பெறல்வேண்டும் என்று முன் சஞ்சிகையிற் கூறியிருக்கிறோம்.

நமது நாட்டுக் கல்வியானது நமது நாட்டின்முன்னேற்றத்தை நாடியிருக்கவேண்டுமானால், கல்வியைச்சார்ந்துள்ள எல்லாப் பாகங்களும் சீராகத் திருத்தப்பெறல்வேண்டும். இப்போது நடந்தேறி வரும் கல்விமுறையினால் தேசத்துக்கு யாதொருவிதமான நன்மையும் கிடைக்கவில்லையென்பதையும், அப்படிக் கிடைப்பதற்கே மார்க்கம் இல்லையென்பதையும் யாரும் மறுக்கமுடியாது. இனியும் இவ்வழியே நடைபெறுமானால், நாட்டின் முன்னேற்றத்துக்கு இது யாதொரு சாதனத்தையும் செய்யமுடியாது என்பதும், அதனாலேயே நாட்டின் முன்னேற்றம் தடைப்படும் என்பதும், தேசாபிமானி ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்ட விஷயங்களேயாம். ஆகையினாலேதான் கல்விமுறையின் எல்லாப்பாகங்களும் சீர்திருத்தமடையவேண்டும் என்று குறித்திருக்கிறோம்.

தற்காலக் கல்விமுறையால் என்னென்ன ஒழுங்கீனங்கள் ஏற்பட்டிருக்கின்றன? என்று ஒருவர் கேட்கலாம்; அதற்குத் தற்காலக் கல்விமுறையின்படி படித்துத் தேர்ந்து வித்யாசாலையைவிட்டு வெளியேறியிருக்கும் மாணவர்களே உத்தரம்சொல்லத் தகுந்தவர்கள்; அல்லது உலக விவகாரத்தில் தெளிந்து தேர்ந்த அம்மாணவரது பிதாக்கள் உத்தரம்சொல்லலாம்; அல்லது தீர்க்க தேசாபிமானிகள், அம்மாணவர்களைக்கொண்டு நமது தேசத்துக்கு எவ்விதமான நன்மையைச் செய்துகொள்ளலாம் என்று சொல்லலாம். ஏன் இத்தனை வீண்கதைகள்? அம்மாணவர்களால் யாதொருபயனையும் தேசம் அடைய முடியாது என்பதுதான் யாவரும் அறிந்ததொன்றாயிற்றே! இப்படி அம் மாணவன் தேசோபகாரியாகத் தேறிவராததற்குக் காரணம் போதனைமுறையேதான் என்பது தோன்றவில்லையா? ஆகையினால் படிப்பின் முறையே மாறுபாடடையவேண்டுமென்பது தெளிவாகிறது.

இவ்விதம் கல்விமுறையே முற்றும் மாறுபாடுறவேண்டும் என்று நாமே அல்ல, பல பத்திராதிபர்களும் தமது பத்திரிகைகளின் மூலமாக முறையிட்டுக்கொண்டுவருகிறார்கள். பல தேசாபிமானிகளும் பல பிரசங்கமேடைகளிலும் நின்று உபந்யஸித்துக்கொண்டுவருகிறார்கள். தற்காலம் பத்திரிகைகளிலும் பிரஸங்கஸபைகளிலும் இவ்வொரு விஷயமே பிரதான விஷயமாகப் பேசப்பட்டுவருவதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். ஆகையினால் செய்யவேண்டிய காரியமின்னதென்பதுதான் இங்கு ஆலோசிக்கத்தக்கது.

ஆக ஒவ்வொரு மாணவனையும், தக்க தேசாபிமானியாகவும் தேசப் பொதுக்கூட்டுறவிற் கலந்துழைக்கும் திறமையுள்ளவனாகவும், தன்மறுப்பும் மனோதைரியமும் விடாமுயற்சியுமுள்ளவனாகவும், ஒழுக்கமும் அடக்கமும் உள்ளவனாகவும், தெய்வவுண்மையையும் நீதிச்சட்டங்களையும் நம்பிப் பயந்துழைப்பவனாகவும் பள்ளிக்கூடத்திலேயே ஆயத்தப்படுத்தவேண்டுவது நம்மில் ஒவ்வொருவரது கடைமையுமாகும்.

இதற்கு முக்யமான வழிகள் பலவுள:— அவற்றுட் சில ஈண்டுக் கூறுவோம்.

I. மாணவர்க்குப் படிப்பிக்கும் படிப்பினைகளெல்லாம் தாய்ப் பாஷையின்மூலமாகவே படிப்பிக்கப்பெறல்வேண்டும்.

II. உபதேசமுறையானது தேசஸ்வபாவத்தையும் மனோதர்மத்தையும் ஆத்மஸ்வரூபத்தையும் கடந்து செல்லப்படாது.

III. பாடங்களானவை, வேளாண்மை, கைத்தொழிற்பயிற்சி, வியாபாரமுறை, கணக்குவைப்பு, சரித்திரவகைகள், சாஸ்திரவகைகள் முதலியன அவற்றுக்கேற்றபடியாகப் போதனைமூலமாகவோ அநுபவமூலமாகவோ அல்லது இரண்டின்மூலமாகவோ கற்பிக்கப்பெறல் வேண்டும்.

IV. தேச ஜனங்களிடத்திற் பழகவேண்டிய முறைக்கு ஏற்ற ஒற்றுமையும் உபகாரசிந்தையும், மனத்திற் பதியும்படி போதிப்பித்தல்வேண்டும்.

V. பலமதக் கோட்பாடுகள் செவ்வனே விரோதபாவமன்றியில் கற்பிக்கப்பெறல்வேண்டும்.

VI. இவைகளைக் கற்பிப்பது அவசியமானபடியால் வித்யாசாலையிலும் காலவரையறைகளும் போதனாமுறைகளும் பரிசோதனைமுறைகளும் ஒழுங்குபெறல்வேண்டும்.

மேற்சொன்ன முறைகளையும் அவைபோன்ற இன்னும் வேண்டிய முறைகளையும் சுதேச சர்வகலாசங்கத்தார்களும் வித்யாப்பிரமுகர்களும் தேசாபிமானிகளும் வித்யாசாலை அத்யக்ஷர்களும் சிறு கூட்டங்களிலும் பெருங்கூட்டங்களிலும் அடிக்கடி கலந்து ஆலோசித்து ஒழுங்காகவும் உண்மையாகவும் நடத்த முயலவேண்டும்.

VII. சுதேச சர்வகலாசங்கமென்று ஒரு பொதுச்சங்கம் ஸ்தாபிக்கப்பெறல்வேண்டும். அதற்கு அங்கத்தினர்களாக ஒவ்வொருபாஷையிலும் பாஷாவல்லவர்களில் மூவருக்குக் குறையாமல் அமைக்கப் பெறல்வேண்டும்.

VIII. சுதேசபாஷாஸங்கங்கள் ஒவ்வொரு பாஷைக்கும் தனித்தனியாக ஏற்படுத்தப்பெற்று அந்தந்தச்சங்கங்கட்கு அந்தந்தப் பெயரிடப்பெறல்வேண்டும்.

IX. பாஷாஸங்கங்களில் அங்கத்தினர்களாக, வேளாண்டொழில், கைத்தொழில், வியாபாரத்தொழில், சரித்திரவகை, சாஸ்திரவகை முதலியவற்றில் வல்லவர்களாக ஒவ்வொருவகையிலும் எழுவர்க்குக் குறையாது அமைக்கப்பெறல்வேண்டும்.

X. சிறு கூட்டங்களில் ஒவ்வொரு வகையினரும் தங்கள் வகையில் தேர்ச்சிபெற்ற மற்றும் சிலரை ஆலோசனைக்காரர்களாகத் தெரிந்தெடுத்துக்கொண்டு, தேசமுன்னேற்றத்தை முனையாகவைத்து ஆலோசித்துச் சீர்திருத்தங்கள் கொண்டுவரவேண்டும்.

XI. இந்தச்சீர்திருத்தங்களைப் பெருங்கூட்டங்களில், தீர்மானத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

இவற்றில் வேண்டுவனவற்றையும் இன்னும் இவைபோன்றவற்றையும் மேதாவிகளைக் கலந்து, அவர்களது ஆலோசனையின்பேரிற் சீர்திருத்தங்களாகக்கொண்டு தேசியக்கல்விமுறையை நடத்துவதே தேச முன்னேற்றத்துக்கு அஸ்திவாரமாகும்.

இவ்வகையான சீர்திருத்தங்களையெல்லாம் நாம் அநுபவமுறைக்குக்கொண்டுவருவதற்குமுன் இன்னும் சில அவசியமான விஷயங்களை ஆலோசிக்கவேண்டியிருக்கிறது. வித்யா விஷயத்தைப்பற்றிப் பொதுவாகவே தேச ஜனங்களெல்லாரும் ஒருமித்துக் கவனம் செலுத்தவேண்டியது அவசியமானதாக, முக்யமாக, உபாத்தியாயர்களும் உபதேசகர்களும் மாணவர்களும் வித்யாசாலையதிகாரிகளும் அத்யக்ஷர்களும் வித்யாப் பொதுச்சட்டங்களிற் சற்றேனும் தவறிநடவாதவர்களாக இருத்தல்வேண்டும். அவருள்ளும் உபாத்தியாயர்கள் விஷயம் அவசியமாகவும் நன்றாகவும் ஆலோசிக்கப் பெறல்வேண்டும். ஒரு குடும்பத்தலைவன் ஒழுங்கீனனானால் அவ்வொருகுடும்பமே கெடும். ஒரு உபாத்தியாயன் ஒழுங்கீனனானால் ஒரு தேசமே கெடும் என்பதற்கு ஐயமேயில்லை. இது யாவர்க்கும் தெரிந்தவிஷயமே. ஆனால், நன்கு ஊன்றிக் கவனிக்கத்தகுந்தது.

வித்யா சட்டங்கள் நன்றாக ஒழுங்குபெற அமைக்கப்பெற்றிருந்தும் அவற்றை எடுத்து ஆளக்கூடிய உபாத்தியாயன் ஒழுங்கினனானால் அச்சட்டங்கள் என்னபயன் தரும்? "வாய்ப்படை மற்றென் பயக்கும் ஆணல்லவர்க்கு"—நன்கு தீட்டப்பெற்றும் விஷம் ஊட்டப் பெற்றுமுள்ள ஆயுதமாயினும் பேடி கைப்படில் அது என்னபயனைத் தரும்? கூரம்பாயினும் வீரன்கை யேறினன்றோ பயனளிக்கும்? தேர்ந்த ஔஷதமாயினும், நோயறிந்து, நோயின்மூலமறிந்து, நோயாளியின் தேஹம் மனம் இவற்றையறிந்து கொடுக்கத்தெரியாதவன் கைப்பட்டால் நோயைப்போக்காமலிருப்பதுடன் தீங்கையும் ஆக்குவிக்கு மல்லவா? வித்யாசாலைகட்கு உபதேசகர்களென்று வருவார் ஒழுங்கில் தவறுபவர்களாயிருந்தால், வித்யாசாலைக்கட்டடம் பெரிதாயிருந்தாலும் அதனுள் சாமான்கள் அபரிமிதமாக இருந்தாலும், வகுப்புகள் எல்லாம் அகன்றும் அழகாகவும் இருந்தாலும் வித்யாவிதிகள் படிக்கக்கேட்க நன்றாக அமைந்திருந்தாலும், யாதொருபயனையும் அளிக்காவன்றோ? தூயவரிடமுள்ள கல்வியானது மதம், ஆணவமிவற்றைப் போக்கும்; தீயவரிடமுள்ளகல்வியானது அவற்றையாக்குகின்றதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோமன்றோ?

தற்காலம் இருக்கும் இந்திய உபாத்தியாயர்களைப்பற்றிப் பேசப் புகும்போது அவர்களை நாம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சில விஷயங்கள் சொல்ல விருப்பம் நமக்கு இருக்கின்றது. அவைகள் சொல்லித் தீரவேண்டியவைகளாகவும், சொல்லாமலிருக்க முடியாதவைகளாகவும் இருக்கின்றன. அவர்கள் மன்னிப்பார்களாக. இப்போது உபாத்திமைத் தொழிலில் அமைந்திருப்பவர்களிற் பெரும்பாலாரும் கீழ்க் குறிப்பிடப் பெறும் வகையினரில் ஒருவராகவே இருக்கக் காண்கிறோம். இந்த உபாத்திமைத் தொழிலைச் சிலர், தாம் செல்லும் அநியாயவழிக்கு ஒரு விளக்காகக் கைப்பிடித்திருக்கிறார்கள். வேறு சிலர் பிழைக்க வேறு வழி தெரியாமல், விதியே என்று இத்தொழிலில் இறங்கியிருக்கிறார்கள். இன்னும் சிலர் வேறு உத்யோகம் அகப்படும் வரையில் இதனை ஒரு ஜீவனோபாயமாகக் கொண்டிறங்கியிருக்கிறார்கள். மற்றுஞ் சிலர், சோம்பேறியாக இருந்து காலங்

கழிப்பதற்கு இதுவே தக்கதொழில் என்று இறங்கி யிருக்கிறார்கள். பின்னுஞ் சிலர், தக்கவயதிற் படிக்காமல் திரிந்தலைந்தோம், இப்போதாவது மாணாக்கர்களைத் துணையாகக்கொண்டு படிப்போம் என்று இத்தொழிலில் இறங்கி யிருக்கிறார்கள். ஆக இத்தகையார் இத்தொழிலில் இறங்கி உழைத்ததின் பயனாக, நல்ல இயற்கையறிவுள்ள மாணவரும் செயற்கையறிவினால் பிரகாசம் பெறாமல் மழுங்கிக் கிடக்கிறார்கள்.

இத்தகைய பெரும்பாலார்போகச் சிறுபாலார் மேதாவிகளாகவும் ஒழுங்குள்ளவர்களாகவும் தேசாபிமானிகளாகவும் பரோபகார சிந்தை யுள்ளவர்களாகவும், இதுவே உத்தமத்தொழில்; இதுவே கௌரவமானதொழில்; இதுவே அவசியமானதொழில் என்று எண்ணித் தமக்கும் தமது பெருமைக்கும் தமது கல்வியாற்றலுக்கும் ஏற்றபடியாக மிகுதியும் ஊதியம் கிடைக்கும் ஊழியம்கிடைத்த போதிலும் அதனை விடுத்து, இந்தத்தொழிலில் இறங்கி உழைத்திருப்பதன்பயனாகவே, சில அரியபெரிய தேசாபிமானச் சிங்கங்களைப்பெற்றிருக்கிறோம். இவ்வகையினர் போன்றவரே நமது தேசியக்கல்வி முறையில் உழைக்கும் உபதேசகர்களாக அமைக்கப்பெறல்வேண்டும். ஒருவராவது அந்தப் பெரும்பாலார் கூட்டத்திற் சேர்ந்தவராக இருத்தல் கூடாது.

அப்பெரும்பாலார் மேலும் நாம் குற்றத்தைச் சாட்டத் தக்க காரணமில்லை. அவர்கள் என்னசெய்வார்கள் பாவம்! அவர்களிற் பெரும்பாலார்க்கும் உழைப்பு அதிகமாகவும் ஊதியம் குறைவாகவும் இருப்பதே முக்யமான காரணமாக இருக்கின்றது. மாணவர்களின் பெற்றோர்களும் அவர்களைக் கவுரவப் படுத்துகிற தில்லை. ஒருசிறிய போலீஸ் உத்தியோகஸ்தனுக்கும், ஒரு கிராமாதிகாரியின் குமாஸ்தாவினுக்கும், ஒரு வருமானவரித் தாசில்தாரின் டலாயத்துக்கும், ஒரு யூனியன் ஆபீஸ் தண்டலுக்கும், ஒரு தாசிவீட்டுத்தரகருக்கும், ஒரு மடத்துச் சம்பிரதிக்கும், ஒரு கோயில் பூஜாரிக்கும், ஒருபிராயச்சித்தம் செய்யும் புரோகிதர்க்கும் தருகிற மரியாதைகூட ஒரு

உத்தமத்தொழிலரான உபாத்தியாயருக்கு ஒருமாணவனது பெற்றோர் கொடுப்பதில்லையென்றால் மற்றென்சொல்லவேண்டியிருக்கிறது?

ஆகையால், பெற்றோர்களும் பிள்ளைகளும் உபதேசகர்களைப் பாராட்டிப் போற்றிப் பக்திசெய்யவேண்டிய முறையும் ஏற்படவேண்டியதவசியம். உபதேசகர்களும் உபாத்திமார்களும் ஒழுங்கும் உயர்ந்த குணமும் உள்ளவர்களாக அமைக்கப்பெறல் வேண்டும். இதற்கு, நமது பழைய நூல்களிற் கண்டுள்ளபடியான ஆசார்யர்களே தக்க முறையிலான ஆசார்யர்களாவார். அவர்கள் நடத்திவந்தமுறையுடன் நவீனமுறைகளையும் சிறிது சேர்த்துநடத்துவதே தக்க முறையாம். இப்போது அந்தப் பிராசீன ஆசார்யர்கட்கும் நவீன உபதேசகர்கட்கும் ஒற்றுமை வேற்றுமை சொல்லவந்தோமல்லோம். நல்ல உபதேசகர்கள் நன்குநேர்ந்து மாணவர்கள் நற்பழக்கம் பெற வேண்டுவதே நமது கோரிக்கையாகும். ஒழுங்கில்லாத உபாத்தியாயரிடத்திற் படித்துவரும் ஆயிரம் மாணவர்களைக்காட்டிலும் ஒழுங்கறிந்துழைக்கும் உபதேசகர்களிடத்திற் படித்துவரும் பத்து மாணவர்களே தேசமுன்னேற்றத்துக்கு உதவுவார்களென்பதைப் பின்னும் வற்புறுத்துகிறோம்.

தக்கவர்களாகவும் மேதாவிகளாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் தற்போது கிடைப்பது அருமைதான். தேடித்தான் தெளியவேண்டும் கிடைக்கும் சிலவரைக்கொண்டேனும் நமது முறையை ஒழுங்காக வெகு சிரமப்பட்டும் நடத்திவந்தோமானால், வெகுவிரைவி லநேகரை நல்ல உபதேசகர்களாக ஆக்கிக்கொள்ளலாகும். அஃதன்றிப் பல நல்ல உபதேசகர்கட்கு இடையில் ஒரு ஒழுங்குகெட்ட உபாத்தியாயரைச்சேர்த்தோமானாலும், நாம் கருதியபடியாகத் தக்கமாணவ உபதேசகர்களைத் தேர்ச்சிசெய்ய முடியாதவராவோம்.

இப்படி நமக்கு, நல்ல உபதேசகர்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கவேண்டியவர்கள் அரசாங்கத்தாராயினும், அவர்கள் வேறு பல அவசியமான வேலைகளில இறங்கி யிருப்பதனால்: இந்தக்காரியத்தை நாம் நம்மவர்களைக் கொண்டே நம் தேசாபிமானிகளைக் கொண்டே

முடித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம், ஆகையினால் கல்விச் சங்கங்களும் கல்விஸ்தாபனங்களும் தக்க தேசாபிமானிகளாலேயே ஆரம்பிக்கப்படல் வேண்டியதாயிருக்கிறது. ஆனால் நமது தேசம் இப்பெரிய காரியத்தில் இறங்கி முடிக்கத் தகுந்தவருவாயில்லாதவழியில் இருந்து தவிப்பது உண்மையாயினும், இந்தக்காரியம் மிக்க அவசியமானதும் தேசமுன்னேற்றத்துக்கு அஸ்திவாரமானதாகவுமிருப்பதனால், தனிகர்களும் மேதாவிகளும் தொழிலாளிகளும் வியாபாரிகளும் ஸ்வலாபத்தைவிடுத்தேனும் தேசாபிமானத் தொழிலில் இறங்கித் தங்களது உடல் பொருள் ஆவி இவற்றைப் பரித்தியாகம் செய்தேனும் ஒத்துழைத்தார்களானால், அவர்களால் தியாகம் செய்யப்பெற்ற உடல் பொருளாவிகளைப்போல் பல்லாயிர மடங்கான உடல் பொருளாவிகளை நம் இந்தியமாதா உண்டாக்கிக் கொடுப்பளென்பதில் யாதொருவிதமான ஸந்தேஹமு மில்லை.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

வஞ்சிமாநகராராய்ச்சி.

வித்யாபாநுவின் (தொகுதி ௧௦-ல்பகுதி ௨ல்) ௫௬ம் பக்கத்தொடர்ச்சி.

———(-)-(⌘)-(-)———

3. கொங்கு குடபுலமாகுமா ?

இனி, கொங்கு குடபுலம் என்பதற்கு வஞ்சிமாநகருடையார் காட்டிய பிரமாணங்களையும் விசாரிப்பாம்:—

வஞ்சிமாநகரென்னும் கட்டுரையில் வாதகக்ஷியார் சொல்லக்கருதியுள்ள விஷயங்களை வெவ்வேறாகப் பகுத்துத் தொகுத்துத் தலைப்பெயர் கொடுத்து வேறுபடவெழுதாது, எல்லாவிஷயங்களும் எங்கும் விரவிவர எழுதிச்சென்றிருப்பதால் அவற்றைத் தனித்தனி தொகுத்துக்கொண்டாராய்தல் மிகவும் அரிதாயிருக்கிறது. ஆயினும், அவற்றுள் ஒவ்வொருவிஷயத்துக்குமுரிய பிரமாணங்களை இயன்றவளவு ஆங்காங்குநின்று மொருகளப்படுத்திக்கொண்டே ஆராய்வோம்.

கொங்கு குடபுலம் என்பதற்கு அவர்காட்டும் முக்கியமான பிரமாணங்களாவன:—

(1) கொங்குநாட்டைப் பலவிடத்தும் குடகொங்கெனவழங்குதலாம்; அதற்கு உதாரணம் கலிகன்றியாழ்வார் சோழன் செங்கணானை அவன் வென்றுகொண்ட நாடுகளாலே "தென்னாடன் குடகொங்கன் சோழன்" என வழங்கியிருப்பது. (வஞ்சிமாநகர்—பக்கம்—6.)

(2) சேக்கிழார் வெள்ளானைச்சருக்கத்தில் கொங்குநாட்டையடைந்து எனக் கூறவேண்டுமிடத்து, " குடகோங்கிலணைந்து " என்று கூறியிருப்பது. (வஞ்சிமாநகர்—பக்கம்—6.)

(3) கொங்குநாட்டை, "குடகோங்குநாடு" என வில்லிபுத்தூரார் கூறியிருப்பது. (வஞ்சிமாநகர்—பக்கம்—118.)

(4) கொங்கரைக் "குடகக்கொங்கர்" என்று சிலப்பதிகாரத்திற் கூறியிருப்பது. (வஞ்சிமாநகர்—பக் 8)

(5) கொங்குநாட்டுப் பேரூரைக் " குடசிதம்பரம் " எனப் பேரூர்ப்புராணங்கூறியது. (வஞ்சிமாநகர்—பக் 8.)

(6) கொங்குநாட்டுச் சிவஸ்தலங்களைக் குறித்துப் பெரியபுராணத்துள், " சென்றசென்ற குடபுலத்துச் சிவனாடியார் பதிகள் " என்புழிக் கொங்குநாடு குடபுலம் என விளக்கமாய்ச் சொல்லப்பட்டிருப்பது. (வஞ்சிமாநகர்—பக் 20.)

(7) கொங்குநாட்டை அருணகிரியார் குடபுலத்தாசராகிய சேரர்க்குரியதென்பது தோன்றச் "சேரர்கொங்கு" என்று விளங்கச் சொல்லியிருப்பது. வஞ்சிமாநகர்-பக் 20)

(8) சங்கநூல்களிற் பலவிடத்தும் குடபுலத்தரசனாகிய சேரனைக் "கொங்கர்கோ" என வழங்கியிருப்பது. (வஞ்சிமாநகர்—பக். 6)

(9) சிலப்பதிகார அபிதானவிளக்கத்தில், "கொங்கு—கொங்கு மண்டலம்; குடநாடு" என்று பிர்ம்மஸ்ரீ, மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் உரையெழுதியிருப்பது. (வஞ்சிமாநகர்—பக்கம் 6-ல் கீழ்க்குறிப்பு.)

(10) "செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ், கொங்குநன்னாடு" எனப் பழநிப்புராணங்கூறியது. (வஞ்சிமாநகர்—பக் 42.)

(11) "கொடித்தடஞ்சிலைக் கோதைநாட்டினிலெழுபதியும்" எனக் கொங்குநாட்டுத் திருப்பதிகளைக் கோதைநாட்டுள்ளனவாகப் பழநிப்புராணங்கூறியது. (வஞ்சிமாநகர்—பக். 42.)

(12) "வெங்கைக்களவழிப்பாடலுக்குவில்லவனைக், கொங்கைத் தளைகளைந்தகோமான்" என்ற சங்கரசோழனுலா. (வஞ்சிமாநகர்—பக்கம் 113.)

(13) சேரனுக்கு வானுலகளித்தான் என்னுங்கருத்தால் "கொங்கைக்கமராவதியளித்தகோ" வென்ற தனிச்செய்யுட்பிரயோகம். (வஞ்சிமாநகர்—பக்கம் 140.

(14) 'மாந்தரக்கொங்கேனாதி'என இலக்கண நூல்களிலுதாரணமாக வழங்குந் தொடர்மொழிப்பிரயோகம். (வஞ்சிமாநகர்—பக்கம் 152.)

(15) "வஞ்சிகுடக்கினிற் கோதையுமாங்கே" என்ற அழகர் கலம்பகப் பிரயோகமுதலியன. (வஞ்சிமாநகர்—பக்கம் 119.)

(16) சேரர்க்குரியனவாக நூல்களிற் சொல்லப்பட்ட ஊர்ப்பெயர் முதலிய கொங்குநாட்டுள்ளனவாகக் காணப்படுதல்., (வஞ்சிமாநகர்—பக்கம் 150, 151,) முதலியன.

இவற்றுள், முதலாவது சான்றான குடகொங்கு என்பதன் பொருள் யாதெனை விசாரிப்பாம்.

“கொங்குகுடபுலமாம்” என அல்வழிமுடிபுகொண்ட வஞ்சிமாநகருடையார்கருத்துப்படி குடகொங்கு என்பதற்கு, குடபுலமும் கொங்கும் ஒன்றுமென்பதுதோன்றக் குடபுலமாகியகொங்கு என்றன்றோ பொருள் சித்திக்கவேண்டும்? முதலில் அப்பொருளாவது சித்திக்கிறதாவென்று பார்ப்போம்.

குடகொங்கு என்னுந் தொடர்மொழியானது மேற்றிசைப்பெயராகிய ‘குடக்கு’ என்னும் நிலைமொழியும், மண்டலவிசேடப்பெயராகிய கொங்கென்னும் வருமொழியுங்கூடிப் புணரியல்வகையாற் குடகொங்கென்றாகியதொரு நிலப்பெயராயிருக்கிறது. இதனால் இது மேலைக்கொங்கு என்பதனையே செம்பொருளாகவுடைத்தென்பதே யாவர்க்கும் ஒப்பமுடிந்ததாகும்.

இப்படியிருக்கவும், இதன் நிலைமொழியாகிய குடசத்தத்துக்குக் “குடக்கோச்சேரல்” என்புழிப்போல, குடபுலம் என்னும் லக்ஷ்யார்த்தங்கொண்டு, குடபுலமாகியகொங்கென்றே பொருள்கொள்ளவேண்டுமென்று வஞ்சிமாநகருடையார் கருதுகிறார்; அது பொருந்தாது. எப்படியெனில்? குடகொங்கு என்பதன் நிலைமொழிக்குக் குடதிசையென்பதுசெம்பொருளாகியமுக்கியார்த்தமாகவும், குடபுலமென்பது குறிப்புப்பொருளாகிய லக்ஷ்யார்த்தமாகவும் இருக்கிறது. சொற்களின் முக்கியார்த்தத்துக்குப் பொருத்தமில்லாதவிடங்களில்மட்டுமே லக்ஷ்யார்த்தம் கொள்ளுதல் முறையாகும். குடக்கோ என்பதில், நிலைமொழிக்குரிய குடதிசையென்னும் முக்யார்த்தமானது கோவினது ஆட்சிக்குயோக்கியமாகாமையாலும், அத்திசையிலுள்ளபுலமே ஆட்சிக்கு யோக்கியமாயிருப்பதாலும், இங்குக் குடசத்தத்துக்குக் குடதிசையென்ற நேர்பொருளை யொழித்தாக குடபுலமென்ற லக்ஷ்யார்த்தங் கொள்ளப்படுகிறது. அதுபோலக் குடகொங்கு என்புழியும் குடசத்தத்தின் முக்கியார்த்தமாகிய மேற்றிசையென்னும் பொருளுக்குக் கொங்கு என்பதனோடு பொருத்தமில்லையென்பதை நிரூபிக்கவேண்டும்; அப்படி நிரூபியாதவரையிற் குடகொங்கு என்பதிலுள்ள குடசத்தத்துக்குக் குடபுலம் என்று பொருள்சொல்வதே சாத்தியமாகாதிருக்கிறது.

அன்றியும் குடகொங்கென்பதிலுள்ள குடசத்தத்துக்குக் குடபுலமென்றுபொருள்கொண்டுவிட்டாலும், அது, குடபுலமாகியகொங்கென்று பொருள்கொள்ள விரும்பும் இருபெயரொட்டுப்பண்புத்தொகைக்குநிலைமொழியாய்நின்று வருமொழியாகியகொங்கைவிசேடிக்கமாட்டாமையால், அதனாலும் வஞ்சிமாநகருடையார்க்கு இஷ்டசித்தியாகிறதில்லை. எப்படி என்றால், குடபுலம் என்பது வஞ்சிமாநகருடையார் கருத்துப்படி கொங்குமண்டலமும், மலைமண்டலமும் சேர்ந்த சேரமண்டலமாதலால் அது வியாபகமாகியே பொதுவாயிருக்கிறது. கொங்குமண்டலமானது அக்குடபுலத்தின் ஏகதேசமாதலால் அது அதற்கு வியாப்பியமாகிச் சிறப்பாயிருக்கிறது. வியாப்பியவியாபக வாசகங்களாலாகிய இருபெயரொட்டுப்பண்புத்தொகைகளெல்லாம் சிறப்புப்பெயரே நிலைமொழியாகவும், பொதுப்பெயரே வருமொழியாகவும் நியதமாயமைந்து, சாரைப்பாம்பு, பாண்டிநாடு, கொங்குமண்டலம், புன்செய்நிலம், என்றற்றொடக்கத்தனவாய்வருகின்றன. அவ்விலக்கணத்துக்கு விபரீதமாக நிலைமொழி பொதுப்பெயரும், வருமொழி சிறப்புப்பெயருமாகிய குடகோங்கென்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகையென ஒருபோதுமாகமாட்டாதாகையால், குடகொங்கென்பதற்குக் குடபுலமாகிய கொங்கென்று பொருள் கொள்ளுதலே தவறாயிருக்கிறது.

இதனை, "இன்னதிதுவெனவரூஉமியற்கை" * என இருபெயரொட்டுப் பண்புத்தொகையிலக்கணத்தில் 'இன்னது' (இத்தன்மையுடையது) என நிலைமொழியை விசேடணமாகவும், 'இது' என வருமொழியைச் சுட்டளவில் விசேடியமாகவும் வைத்துத் தொல்காப்பியனார் சூத்திரஞ்செய்தமையானும், அக்கருத்தை உரைகாரரறிந்துரைத்தமையானு மறிக.

இதனாற் 'குடகொங்கு' என்ற கவிப்பிரயோகங்களுள் ஒன்றற்கேனும் குடபுலமாகிய கொங்கு என்று பொருள்கொள்ளற்கிலக்கணநூலிடங்கொடாமையால், அங்ஙனஞ்சொல்லுதல் தவறென்றும், வேறு பொருளே கொள்ளவேண்டுமென்றும் நிரூபிக்கப்பட்டது.

* தொல்காப்பியச் சொல்லதிகாரத்துள் "வண்ணத்தின் வடிவின்" என்ற முதற்குறிப்புடையது.

ஆதலால், (கொங்குங் குடபுலமும் ஒன்றென்று நாட்டவேண்டி) கொங்குநாட்டைப் பலவிடத்தும் குடகொங்கெனவழங்குதலை, வஞ்சிமாநகருடையார் தம் கக்ஷிக்கு முதல் ஆதாரவாகக்காட்டியது சிறிதும் சாதகமில்லதாயிற்று; பாதகமாயுமிருக்கிறது.

இனிக் "குடகோங்கு" என்பதற்குக் குடபுலமாகிய கோங்கு என அல்வழியிற்பொருள்கொள்வதைவிட்டு, குடபுலத்துள்ளகோங்கு என வேற்றுமைவழியிற் பொருள்சொல்லவருவாராயின், அதற்கும் இடமில்லாதிருக்கும்படி குடபுலத்துட் கொங்குமண்டலமில்லையென்று முன்னரே நிரூபிக்கப்பட்டுவிட்டமையாலதுவும் பொருந்துவதாயில்லை. ஆனால் வாதக்கக்ஷியார் கருத்துப்படி (வழக்குவிட்டுக் கொடுத்து) கொங்குமண்டலம் குடபுலத்துள்ளதாகவே வைத்துக் கொண்டு பார்க்கவேண்டுமானாலும் பார்ப்போம். அதனாலும் அவர்க்கிஷ்டசித்தியாகிறதில்லை.

எப்படியென்றால், "தென்னுடன் குடகொங்கன்" † என்றதில் குடகொங்கன் என்பதற்கு அவர் குடபுலத்துள்ள கொங்குநாட்டை வென்றுகொண்டவன் என்றுதானே பொருள் சொல்லவேண்டும்? இப்பொருள் சோழன் செங்கணானைத் தமிழுலகு முழுதுக்கும் நியாமகன் எனச் சிறப்பிக்குங்கருத்தால், தென்னுடன் என்றதனாற் பாண்டிமண்டலத்துக்கு நியாமகனென்றும், சோழன் என்றதனாற் றொண்டைமண்டலமகப்படச் சோழமண்டலத்துக்கு நியாமகனென்றும், கூறியமுறையே கூறாது, அதுபிறழும்படி குடபுலத்துள் ஏகதேசமாகிய கொங்குநாட்டுக்குமட்டும் நியாமகன் என்று கூறுதல் பொருந்துவதாகுமா? குடபுலத்துள்ள கொங்குநாட்டுக்குநியாமகன் எனக் குடபுலத்தையெடுத்துக்கழித்தால், கொங்குநாடொழிந்த குடபுலத்துக்கு நியாமகனில்லையென்பது குறிப்பாற்பெறப்பட்டுப் புகழ்பொருளுக்கிழுக்குண்டாக்குமாதலாலது கவியிநயத்தொடு பொருந்தியபொருளாகாதெனவறிக. ஆயின், தமிழ் நாடொழிந்த ஏனைநாடுகளுக்கும் நியாமகனென்று கூறாமை இழுக்கன்றோவெனில்? இங்கு, குடபுலத்துள் என்று எடுத்துக்கழித்ததுபோல, ஏனைநாடுகளையும் எடுத்துக்கழித்திருந்தால் இழுக்குண்டாக்குவதாம்; அங்ஙனமெடுத்துக்கழியாமையால் இழுக்கன்றெனவறிக.

---

† தென்னுடன் குடகொங்கன் என்றது முதலாவது சான்றாக எடுத்துக் காட்டிய கலிகன்றியாழ்வார் பிரயோகம். வஞ்சிமாநகர் பக்கம்-6.

அன்றியும், சோழன் செங்கணன் குடபுலமாகிய சேரமண்டலத்துக்கு நியாமகனாக இருந்தாலும், அவனைச் சிறப்பிப்பார் உள்ளதை யுள்ளபடியுரைக்குங்கருத்துடையராயிருப்பினும் தென்னாடன் கொங்கர்பிரான் சோழன் எனப் புகழ்பொருளுக்கிழுக்குத் தோன்றாது செவ்வனே கூறுதலே கவிமரபாயிருக்கிறது. வஞ்சிமாநகரார்களுக் கப்படி கொங்கு குடபுலத்தின் ஏகதேசமாதலால், பாண்டிநாட்டின் ஏகதேசத்திலுரிமையுடைய குறுநிலமன்னனைப் பாண்டியன் என வழங்குதல் போல, குடபுலத்தினேகதேசமான கொங்கிலுரிமையுடையவச் சோழனையும் "தென்னாடன் குடபுலக்கோன் சோழன்" என்று சிறப்பித்துக்கூறுதல் குற்றமாகாதன்றோ? அங்ஙனங்கூறாது குடகொங்கனென்றே கூறினமையால் இங்குக் குடகொங்கென்பதற்குக் குடபுலத்துள்ள கொங்கென்று பொருள்கொள்ளுதல் பொருந்தாததாயிற்று. ஆகவே "குடகொங்கன்" என்றதற்குக் குடபுலத்தையும், கொங்குமண்டலத்தையு மிரண்டையு மொருங்குடையான்: என்ற பொருள்கொள்ள வேண்டுமெனவறிக.

அன்றியும், சோழன் செங்கணன் "வெங்கைக்களவழிப்பாடலுக்குவில்லவனைக் கோங்கைத்தளைகளைந்தகோமான்" என்று புலவர் பாடும்படி சேரனையுங் கொங்கரையும் சேரவொருகளத்து வென்று சிறையிட்டமைதெரிந்து அவரை மீட்கவேண்டி அவனைப் பொய்கையார்பாடிப்பிரசித்திபெற்ற களவழிப்பாடலைக் கசடறக்கற்று அதனினும், "வஞ்சிக்கோவட்டகளத்து" "கொங்கரையட்டகளத்து" என்று மேற்கோள்காட்டிய வஞ்சிமாநகருடையார், கோச்செங்கணன் வஞ்சிக்கோவாகிய குடபுலத்தரசனையும், கொங்குநாட்டரசராகிய குறுநிலமன்னரையும் வென்றவனென்பதை நன்றுதெரிந்தவராதலால், அவனைக் குடகொங்கன் என்றதற்குக் குடபுலத்துக்கும் கொங்குமண்டலத்துக்கும் நியாமகன் என்று பொருள்கொள்ளக்கூடாதென ஆக்ஷேபிக்க மாட்டாதவராயுமிருக்கிறார்.

ஆதலால் இங்கு, "குடகொங்கு" என்றது குடபுலமும் கொங்கும் என்னும் உம்மைத்தொகைநிலைத் தொடராகவேநின்று குடபுலத்துள்ள கொங்கு எனக் குடபுலத்துக்கும் கொங்குக்கும் ஏகதேச ஒற்றுமையும் சொல்லுதற்கு இடமில்லாமல், கொங்குவேறு குடபுலம்வேறு எனத் தெளிவுபடுத்தி, வாதகக்ஷிக்குப் பாதகமாகியும், எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாகியும் உண்மையை நன்கு நிரூபித்துவிட்டது.

(தொடரும்.)

செந்தமிழ்.

ஸ்ரீ:

இலக்குமி தோத்திரம்.

காப்பு.

தேவிற் சிறந்த திருமா றிருமார்பு
மேவிச் சிறந்து விளங்குமெழின்—மாவின்மேற்
செந்தமிழிற் செய்நூல் சிறக்க வருள்புரியுங்
கந்தமகிழ் மாறன் கழல்.

அவையடக்கம்.

சிந்தைக் கினிய செவிக்கினிய செய்யுட்கள்
முந்தைப் பெரியோர் மொழிந்ததுணர்ந்—திந்நிரைமேற்
பேதையே னும்மவரைப் பின்பற்றிச் சொல்லுமிதிற்
தீதுகுறி யார்பெரியோர் தேர்ந்து

நூல்.

சீதரனார் மார்புறையுஞ் செல்வி நினதடியே
ஓதுதமிழ்ச் செய்யு ளுரைதேர்ந்து—பேதையேன்
வேண்டும் பொருளை விரைந்து பரிந்தளித்திங்
கீண்டும் புகழ்தருவா யேய்ந்து (௧)

நன்மையொடு தீமை நனிவரினு மஞ்சாத
தன்மை யளித்துத் தகையளிப்பாய்—சொன்மலராற்
றேவர் பரவுந் திருவே மருவிநிதம்
பூவி னுறைவாய் புரிந்து (௨)

அருமை யறியா ரகந்தோறுஞ் சென்று
பெருமை யெடுத்தவர் பாற்பேசுங்—கருமமொழித்
தென்றென்னை யாள்வா யியல்கூர் திருவேநின்
வென்றி தொழுதேன் விழைந்து (௩)

என்பி லுருமுதலா வேய்ந்த வுயிரெவையு
மன்புருவா நின்னை யடிபணிந்தே—பின்புறுமென்
றுன்றே றுரைத்த வருண்மொழிகேட் டன்னேயுன்
சான்ற புகழ்துதிப்பன் சார்ந்து (௪)

செந்தா மரைமலரே சீரியதோ வுன்பாத
நந்தாவென் சிந்தைமலர் நண்ணாத—விந்தையிதென்
அன்னை யுனதுரையு ளன்பாக மாகுமெனச்
சொன்னார்முன் னோருந் துணிந்து (௫)

மன்னா வுலகத்து மன்னிய மூன்றனுளுந்
துன்னு நடுவணது தோன்றிடுமேற்—பின்னிரண்
டெய்த லெளிதென் றிசைப்ப ரதுபெருகி
யுய்தலுநின் னாலன்றோ வோது (௬)

தேனார் கமலத் திருவே சிலருலகிற்
றானே தருக்கித் தனைமதித்திவ்—வூனா
றுடற்பிறவி வேட்டுண் டுழன்று நிதமு
மிடர்ப் படுவ ரென்னே யிது (௭)

தூயசென நேரிற் றுதித்துப் பிறரிடத்திற்
பேயரென விகழும் பேதையர்பாற்—போயடியேன்
பத்திவைத்து நாளும் பழகா வசமளித்தென்
சித்தங் குடிகொள்வாய் சேர்ந்து (௮)

காயம் நிலையாகக் கருதிக் கழன்றுதம
தாயுள் கழித்தழிவ ரற்பர்கள்—தாயேயுன்
பொன்னடியைப் போற்றிப் புனிதமுறு வானவர்க்கிங்
கின்னருள்பா லிப்பா யிசைந்து (௯)

சொல்லும் பொருளுந் தொடையுநடை யுந்தொடர்ந்து
செல்லு மொழுக்கஞ் சிறந்ததாய்—வல்லுநர்செய்
நூலோ டிதையு நவலும் பரிசளிப்பாய்
சேலோடுங் கண்ணாய் தெளிந்து (௰)

S. ஆழ்வாரையங்கார்,
க.வி. கலாசாலை, கோனாபட்டு.

ஸ்ரீ:

காசி ஹிந்து சர்வகலா சங்கத்தின் சாஸனம்.

கீழே குறித்திருப்பது, காசி ஹிந்துசர்வகலாசங்கத்துக் கட்டடத்தின் அஸ்திவாரச் சலவைக்கல்லில் வரையப்பெற்றிருக்கும் ஸாஸனம்:—

ஓம்:

காசிவிச்வவித்யாலய:

ச்லோகம்.

மாகே சுக்லே ப்ரதிபதி திதௌ சுக்ரவாரே சிலாயா
ந்யாஸம் காச்யாம் ஹ்யகநவமஹீஸம்மிதே விக்ரமாப்தே |
ப்ராஞ்சம் தர்மம் பரிபலயிதும் விச்வ வித்யாலயஸ்யா—
கார்ஷீத் ஸம்ராட் ப்ரதிநிதிவரோலார்ட் ஹார்டிங்ஸ ஸத்கீர்த்தி: ||

Benares Hindu Univercity.

This Foundation-stone was laid By H. E. The Right Honourable Charles Baron Hardinge of Penshurst, P. C., G. C. B., G. M. S. I., G. C. M. G., G. M. I E., G. C. V. O., I. S. O., Viceroy and Governor General of India.

February—4—1916.

மேற்குறித்த அஸ்திவாரச் சலவைக்கல்லின் அடியில் தோண்டப் பெற்றிருக்கும் ஒரு சிறு கிடங்கில் உள்ள ஓர் தாமிரப்பெட்டியில், பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடைய தற்கால நாணயவகைகளும் இந்திய சுதேசராஜாங்கங்களுடைய நாணயவகைகளும் ஹிந்துசர்வகலாசங்கத்தின் அறிக்கைகளும் "லீடர்" "பயனீர்" பத்திரிகைகளின் இவ் விஷயத்தைக்குறித்துள்ள ஏடுகளும் கீழேகுறிக்கப்பெறும் பொருள் தாக்கூடிய ஸம்ஸ்க்ருதச்லோகங்க ளடங்கிய ஒரு தாமிரச்சாஸனமும் அடங்கி யிருக்கின்றன.

தாமிரச்சாஸனத்தின் மொழிபெயர்ப்பு.

கலியுகத்தின் ஐயாயிரவருஷங்கள் இந்தப்பாரதகண்டத்திற் செல்லா நிற்கும்போது, காலவேகத்தினலே பீடிக்கப்பட்டுப் பிராசீனதர்மங்களும் அவற்றைஅவலம்பித்து ஒழுகிவரும் மனுபுத்திரர்களாகியமானவர்களும் துர்வ்யவஸ்தையையடைந்து துக்கபூரிதர்களாகிக் கலங்கியிருக்கும் இந்தச்சமயம், அந்தத் தர்மங்களெல்லாம் மறுபடியும் கிளைக்கும்பொருட்டு இந்தப் போதுச்சக்தி தோன்றியிருக்கிறது.

புண்ணிய நதியாகிய கங்கையின் கரையில் நிலைபெற்றிருக்கும் புண்ணிய க்ஷேத்திரமாகிய காசிக்ஷேத்திரத்திற் பிராசீனதர்மங்களின் புனருத்தாரணத்தையும் ஆசாரங்களையும் விளைவுசெய்யும்பொருட்டு எல்லாம்வல்ல இறைவனுடைய மனத்தில் ஆனந்தஅருள் தோன்றி அவரது சர்வமங்கள இச்சாசக்தி வெளிக்கிளம்பியது.

சர்வச்ருஷ்டிகர்த்தாவும் ஸர்வரக்ஷணகர்த்தாவும் ஸர்வஹ்ருதயவாசியுமாகிய இறைவன், தமது கீழைநாட்டு மேலைநாட்டுக்குழந்தைகளை பொற்றுமைப்படுத்தி நற்குண நற்செய்கைகளுடன் அவர்கள் உழைக்கும்பொருட்டு இந்தச் சர்வகலாசங்கத்தைத் தமது லீலாலோகத்தின் ராஜதானியாகிய இந்தக் காசிக்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்க அருள்காட்டினர்.

இவ்விதமான அவரது அருள்நோக்கமானது முதன்முதலில் நமது தேசபக்தராகிய ஸ்ரீ மதனமோஹனமாளவீய மஹானது பரிசுத்தமனத்திற் பிரகாசித்தது. அவரிடத்தில்தான் இறைவன் தக்கபிரசாரகசக்தியையருளி அவரதுஉன்னதக்குரலினல் இந்தியர்களை யெழுப்பி இந்தியத் தலைவர்களையும் அதிகாரிகளையும் இந்தத் தீர்மானத்துக்கு வரும்படியும் தூண்டியருளினர்.

இந்தமஹானே யல்லாமல், உன்னத நோக்க முடையவர்களான பிகானீர் அரசராகிய கங்காஸின்ஹா அவர்களும், தர்ப்பங்கா தேசத்துப் பூபதிசிகாமணியாகிய ராமேச்வஸின்ஹா அவர்களும் பிரதான அதிகாரிகளாகவும் முன்வந்துநின்றூர்கள். அநேக ரஹஸ்யார்த்த

உத்போதகரும் பிரபுசிகாமணியும் நியாயவாதி திலகருமாகிய ஞானசாரிய சுந்தபலாலரும், குருதாஸர், ரஸவிஹாரி ஆதித்யராமர் ஆகிய ரிஷிகளும் நாவின் பெருமையைப் படைத்த அன்னை வசந்தா தேவியும் மற்றும் உள்ளமேதாவிகளும் அதிகாரிகளாக வந்து நின்றார்கள். மற்றும் உள்ள பெரியோர்களும் இதனுடைய பலதிறத் துறைகளின் பொறுப்பை யேற்றுக் கொண்டார்கள்.

மேலும், மஹோத்தமியாகிய மஹாராணி விக்டோரியாவின் பௌத்திரரும், ஏழாவது எட்வர்ட் அரசரது புதல்வரும் ஐந்தாவது ஜார்ஜ் அரசருமாகிய நமது பிரிட்டிஷ் சக்கரவர்த்தியினது செங்கோலாட்சியின் காலத்தில், இறைவனது அருட் சக்தியாகிய இந்தப் போதுச் சக்தியானது, மீவார்—காசி—காச்மீரம்—மைசூர்—ஆல்வார்—கோடா—ஜயபுரி—இந்தூர்—ஜோதிபுரி—கபூர்த்தாலா—நாபா—க்வாலியர் முதலிய சுதேசங்களினது அரசர்களையும் மற்றும் ஆங்காங்குள்ள பேருளுடையார்களையும், குலம் குணம் பலம் பணம் இவற்றிற்சிறந்த ஏனையோர்களையும் ஒருமிக்கத் தூண்டிவிட்டுத் "தர்மத்துக்கு உயர்வும் ஆசாரத்துக்கு ஆதிக்யமும் நாகரிகத்துக்கு நன்மையும் லௌகிகம் பாரலௌகிகமாகியவற்றுக்கு நல்லுறுதியும் தரக்கூடிய இந்தச் சர்வகலாசங்கத்தில் ஒத்துழைக்கும்படி கூட்டிவிட்டது. நமது காருண்ய சக்ரவர்த்தியின் இந்திய ப்ரதிநிதியும் சாந்தி தாந்தி தீரம் வீரம் திருதி ஸ்திதி அன்பு அருள் இவற்றை ஒருங்கே பெற்றுள்ள பேருளாளருமாகிய ஹார்டிங்ப்ரபு இந்தச்சங்கத்தின் கட்டடத்துக்குஅஸ்திவாரத்தை ஸ்தாபித்துச் சர்வமங்களமும் அருளும்படி இறைவனை வேண்டினர்.

1972 விக்ரம வருஷம் மாகமாஸ சுக்லபக்ஷத்து முதல் தினத்தில் நல்லஹோரையிற் சூரிய சந்திராதிக்ரஹங்கள் தத்தம் நன்னிலையில் நிற்கும்போது இந்த அஸ்திவாரம் ஸ்தாபிக்கப் பெற்றது.

(இந்த சுபமுகூர்த்தமானது விந்தியத்துக்கு வடக்கேவழங்கும் பஞ்சாங்க கணனப்படி அமைக்கப்பட்டிருக்கிறது.)

நாளுங் கோளும் நற்பய னளித்துச்
சீரும் பேருஞ் சிறக்கப் பெற்று
மாணவர் மன்னவர் மாண்புற நின்று
தேசஞ் செழித்துத் திருவுமோங் குகவே.

ச்லோகம்.

ஸரஸ்வதீ ச்ருதிமஹதீ மஹீயதாம்
ததஸ்நுதா ஞானஸுதரீ நிபீயதாம்
ஸதாமதி: சுபசரிதேவி தீயதாம்
ரதி: பரா பரம குரௌளப்ர சீயதாம்.
ஓம். சுபம்.

பத்திராதிபர்.

௨

ராம் மோஹன் ராய்.

இற்றைக்குச் சற்றேறக்தாழ நூற்றைம்பதாண்டுகளுக்குமுன் ஹிந்துஜனஸமூகமானது மூடபக்தியென்னு மோர் இருட்கடலில் மூழ்கித் தப்பியேறக் கரைகாணுது தத்தளித்து அகதியாய் நின்ற காலத்தில் ஸமயஸஞ்சீவிபோலவும், கடக்கமுடியாதார்க்கு வழி காட்டி உதவும் மங்காது மின்னும் தனிநக்ஷத்திரம்போலவும் காலத் தே தோன்றி அனைவருக்கும் உற்ற துணையாய்நின்றுதவிய மஹா னுகிய ராம்மோஹனர் 'சிங்காரமாடச் சிகரமூபர் வீடுநிறைபங்காள மாகாணத்தில் ராதாநகரத்தில் ஜனனமானுர். பிறந்தவருஷம் 1774. தேசசரித்திரத்தில் முக்கியமாகக் கருதப்பட்டிருக்கும் வருஷம் இவ்வருஷமே. ஏனெனில், அவ்வருஷத்தில்தான் உயர்தரச் சட்ட நிருபணஸபையும் சட்ட நிர்வாக ஸபையும் ஸ்தாபிக்கப் பட்டன.

இவர் தந்தையார் ராமகண்டராய். இவர் பாட்டனுர் மூர்ஷதா பாத்திற் குடியிருந்து முகலாய ஆளுகையில் உன்னத உத்யோகத் திலமர்ந்து மேன்மை பெற்றவர். வாழ்நாளிறுதியில் அரசாங்கத் தாராற் சீராக நடத்தப்படாமையாற் போதவனம்சென்று வசித்து

வந்தார். அங்கு அவருக்குக் கொஞ்சம் பூஸ்திதி இருந்தது. இவர் தந்தை ஒரு சிறு ஜமீந்தார். தம் குடிகளாலும் மற்றுமுள்ள சுற்றுக் கிராமவாசிகளாலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தவர். இவர் தாயார் தக்காணி என்பவர். தெய்வபக்தி குணசம்பத்து முதலியன அவளிடத்திற் குடிகொண்டிருந்தன. ஆகவே இவர் குலத்தாலும் நலத்தாலும் மேன்மைபெற்ற குடும்பத்திற் பிறந்தவர்.

சிறுபிராயத்திற் கற்கவேண்டிய விஷயங்களைத் தம்பெற்றோரிடமிருந்து கேட்டுக் கற்றுப் பயின்று வந்தார். அக்காலத்திலேயே பாரசிகபாஷையையும் படித்துப் பலனடைந்தார். அதன்பின் கிராமபாடசாலையில் வங்காளபாஷைப் பாலபாடங்களைப் படித்தார். வாழ்நாளில் முன்னேற்ற மடைய வங்காளபாஷை கொஞ்சமும் உதவாதென்றறிந்த இவர் தந்தை இவரைப் பாடலீபுரம் அனுப்புவித்து அரபியபாஷையைக் கற்கச்செய்தார். ஹிந்துக்களுக்கு வேதபாஷையாகிய ஸம்ஸ்கிருதத்தைத் தம்மகன் கற்றுப் பலனடைய வேண்டும் என்ற ஆசைகொண்டு இவரைக் காசிக்கு அனுப்புவித்தார். முக்திநகர் சென்ற இவர் தக்க ஆசிரியரைச் சேர்ந்து, 'மாண்புடையார் தம்மொடு பயிறல் வினுதல் வினயவை விடுத்தல்' முதலிய மாணவ இலக்கணங்களுடன் அறிந்தபாடங்களைப் போற்றியும், கேட்டவைகளை நினைத்தும், அரிஸ்தாதலியன், யூகலிதன் முதலாய மேனாட்டுக் கவிஸ்ரேஷ்டர்களைபற்றிய நூல்களின் மொழிபெயர்ப்புகளைக் குருவாயிலாகக் கேட்டும் வந்தார்.

வயது பதினாறுநிறையவும் அரபி, பாரசிகம் க்ரேக், ஸம்ஸ்கிருதமாதியபாஷா கவிஞர்களின் காவியங்களையும், தத்துவ ஞானிகளுடைய தத்துவ நூல்களையும் கசடறக்கற்றுப் பாண்டித்யமடைந்தார். ஹிந்துமதத் தத்துவத்துக்கும் இதரமதத் தத்துவங்களுக்குமுள்ள பாகுபாடுகளையும் ஒற்றுமை வேற்றுமைகளையும் அறிவதற்குப்பின் சாதகமாய் நின்றுதவியது பாஷாஞானமே.

இடையிடையே வேதாந்த நூல்களையும் யோக நூல்களையும் இவர் தினேதினே படித்து விசாரஞ் செய்து தேர்ச்சிபெற்றார். வேதாந்தஉபநிஷத்துக்களின் கருப்பொருளை அறிந்ததே தாமசம்.

விக்ரஹ ஆராதனையைக் கண்டனஞ்செய்யச் சீறிக் கொதித்து முன் வந்தார். படிப்பு முடிந்ததும் தம் வீடுவந்துசேர்ந்தார். சரீரப் பான்மையில் வேறுபாடடையாமல் மனம்வேறுபட்டுக் கொள்கை வேறுபட்டு முற்றும் நூதனபுருஷராகவே தோன்றினார்.

(இன்னும் வரும்)

வீ. வாஸுதேவன்.

அவதார நோக்கம்.

ஸஹோதரர்களே!

இந்தத்தேசத்தின்பெயர் இந்தியா. இந்திரியத்திற் கிருப்பிடமென மந்தகாசிக்கும் இந்தியா இது. பாவலர்போற்றும் புண்ணிய பூமி இது. நாவலர்நாளும் துதிக்கும் நாடு இது. காவலர் கையும் காக்கும் காசினி இது. பார்க்கப் பலரும் ஓடிவரும் பழைய தேசம் இது. "பெயருக்கேனும் இந்தியா நம்முடையது என விளங்கட்டும்" என்று சிலரும் அட்டகாசிக்கும் அருமைத்தேயம் இது. தேவதிருவிளையாட்டின் வெளிவருகைக்கு இருப்பிடம் இது. எட்டாத நாகரிகத்தின் ஏடு இது. நிறைந்து விளங்கும் தேசம் இது. மாயையை மயக்கும் மகிமைப்பூமி இது. இதுவே திருத்தேசம். இதிற் பிறப்பதும் பூர்வஜன்ம புண்ணிய விசேஷம்.

ஆகையால், அடுத்த தேசத்திலிருந்துவரும் அன்னியனைக் கண்டு மயங்காமற் பெற்றெடுத்த பெரியோர்களைக் கண்டு உபசரியுங்கள். வாய்ச்சமர்த்தைக்கண்டு கலங்காமல் ஆத்தும சுகானுபவத்தை உற்றுப்பாருங்கள். தளுக்கில் தியங்காமல் திருத்தமான உண்மையைக் காணுங்கள். குலுக்கிற் கதறுமற் குணவிசேஷத்தைக் குறிப்பிடுங்கள். மினுக்கிலே மிரளாமல் ஜீவமின்னலைச் சாருங்கள். சட்டையிலும் குல்லாவிலும் சாராமல், சாசுவதமான பெரியோரைத் தேடுங்கள். கந்தைத்துணியைக் கட்டிவிளையாடும் கருத்தர்களைப் பாருங்கள். ஓட்டெடுத்து வீடுதோறும் பிச்சையெடுக்கும் பிரதாப சீலர்களைக் கூவுங்கள். காடுசென்று தவஞ்செய்யும் வைதிகஸ்வரூபர்களை வரவழையுங்கள். சிவசிவஎன்று துதிக்கும் சிங்கார பக்தர்

களை உபசரியுங்கள். கிருஷ்ணகிருஷ்ணஎன்று கிருபாத்தியானஞ் செய்யும் கின்னரகிம்புருடர்களைத் துதியுங்கள். ராமராம என்று இரவும் பகலும் ரமிக்கும் ரமணர்களைப் பாருங்கள். இடிபட்ட கோவில்களைப் புதுப்பிக்குங் கருணை கொள்ளுங்கள். எட்டுப்பிரதிகளை அச்சிற்கொடுக்க ஆர்ப்பரியுங்கள். அன்னதானம் உள்ள இடமெங்கும் நடக்கத் திருமனதுகொள்ளுங்கள். பித்தனெனத் திரியும் பிரம்மநிஷ்டரைக் கூப்பிடுங்கள். நவீனநாகரிக ஆபாசத்தைச் சற்றே ஒதுக்குங்கள். விபூதிபூசும் வீரியர்களைத் தொழுங்கள். ருத்திராக்ஷமணி கண்டர்களைத் துதிசெய்யுங்கள். பதினெட்டுச் சித்தர்களையும் பரிந்து உபசரியுங்கள். பிரம்மஞானிகள் கால்களிலேவிழுங்கள். பக்தசிகாமணிகளைப் பரிந்து பாருங்கள். பழஞ்சோற்றுப் பானையில் நனைத்த பழைய புஸ்தகங்களை எடுத்துலர்த்தி எள்ளளவும் விடாமற் பாருங்கள். பேதிக்கச் சிலர் விரும்பிய வேதங்களைச் சாதித்துக் காட்டுங்கள். குருமார்களைக் கௌரவ விலாசத்தில் வைத்து அவர் தம் அடிதொழுங்கள். சென்றதைக்கனவெனச் சிந்தியுங்கள். நடப்பதை நனவென நண்ணுங்கள். நமோநம ஓமென நாடுங்கள். சற்றே நமதுவைதிகவிலாசத்தை நோக்குங்கள். பரமஹம்ஸபதவிக்கு அனவரத சரணமிடுங்கள். பக்தஅடியாரெனக் கைகூப்புங்கள்.

இவ்வழிவந்தாலோ, நமது தேசத்தை முன்னுக்குக் கொண்டுவர, ஜாதிவருணாசிரமங்களை நிலைநிறுத்த, வறுமைப்பிணியை விலக்கிபருள, கருமானுஷ்டங்களை நிலைநாட்ட, நமதானந்தம்பெருகிவர, நமது பெரியோர்களைக் கண்டு நாம் கைதொழ, நமது மதம் விருத்தியாக, நமது பழமை புதுமையாகி வெளிவர, நாடெங்கும் நன்மை விளையாட, பக்திபோகம் பலருக்கும்விளங்க, ஞானாமிருதம் ஊற்றென ஊறிவர, வேஷம் அற, தாகந்திர பரமோத்தமமான பரமஹம்ஸ உதயம் வெளிவரும்.

டி. வி. வெங்கடராகவலு,
உபாத்தியாயர், மாடல்ஸெக்ஷன்,
புதுக்கோட்டை.

வாழ்த்துக்கவிகள்.

கோநகர் 'ஞானசம்பந்த நற்சபை' வாழ்த்து.

கட்டளைக் கலித்துறை.

'எங்குமென் ஞான்று மியாவருங் கண்கண்டிறைஞ் சவரும்
நங்கலை மாதரு ளால் "ஞான சம்பந்த நற்சபை" யும்
சங்கத் தமிழ்க்கலா சாலைநற் புத்தக சாலைகளும்
மங்கள மாக வயக்கோந கோநகர் மாண்புறவே.

[மாண்புற-முற்றாகவும், வினையெச்சமாகவும் கொள்ளலாம்.

ஷெ சபையைச் சென்ற வருஷோத்ஸவக் கொண்டாட்டத்திற் சபைத்தலைமைவகித்துச் சிறப்பித்த திருச்சி ஸப்ஜட்ஜ் ப்ரஹ்மஸ்ரீ ஏ. எஸ். பாலசுப்பிரமண்ய ஐயரவர்கள் பி. ஏ. பி. எல். மீது வாழ்த்துக்கவி.

நேரிசை வெண்பா.

கோநகர நற்சபையிற் கூடுமைந்தாம் ஆண்டுவிழா
தூநயம்வாய்ப் பத்தலைமைத் தோன்றலாய்—ஞானபந்தேர்
ஸ்ரீபால சுப்ரமண்ய விப்ரமணி செப்புதர்ம
மாபாலன உரைச்சீர் வாழ்க்து.

தேவகோட்டை வைசியசிவானந்தசபை வாழ்த்து.

அறுசீர் விருத்தம்.

இலகுபொரு ளுடையவர்நூல் நயமுணர்வோ ரெனுமிவர்கள் இருவோர்வேறே
உலகியற்கை யீதென்னும் உரை யிந்நாள் தம்மவருக் கொவ்வா தாக்க
நலமோங்க இருபொருளும் நனிமதிக்கும் தேவைநகர் நகரத்தார்தம்
வலமோங்கும் 'வைசியசி வானந்த சபை' நாளும் வயங்கி வாழி.

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு" என்றுந் திருக்குறட்கருத்து முன்னிரண்டடிகளிற் காண்க.

கட்டளைக் கலித்துறை.

வாழிய செல்வ வளம்அவ் வளத்தின் மலிபயனு
வாழிய என்றும் வளர்கலை ஞானம் மகிதலத்து
வாழிய நற்கலை மாட்சி தெரித்திடும் வண்டமிழ்ச்சீர்
வாழிய வைசியர் தேவை நகர்ச்சபை வாழியவே.

வே. முத்துஸாமி ஐயர்; எம். ஏ. எல். டி.

மதுரை.

சுலக்ஷணா.

[எ௨ம் பக்கத் தொடர்ச்சி]

"சிந்தாமணி! அந்தஸ்துள்ள உயர்குலமாது ஒருத்தி உன்னை அலக்ஷியமாக நினைக்கவில்லை என்று உனக்குத்தெரிவித்தால், நீ என்ன செய்வாய்?" என்று சுலக்ஷணா தாழ்ந்த குரலுடன் சொன்னாள். இந்தப்பேச்சைக் கேட்டதும் சிந்தாமணிக்கு ஆச்சர்யமும் பயமும் உண்டாயிற்று. ஒரு நிமிஷநேரம் சுலக்ஷணா தன்னைக் கலியாணம் செய்துகொள்ளச் சொல்லுவாளோ என்று நினைத்தான். ஆனால் அடுத்த நிமிஷமே அது பிழையான எண்ணம் என்று அதைத் தள்ளி விட்டான். வேறொரு எண்ணம் அவன் மனதில் உண்டாயிற்று. தனக்கும் அம்புஜத்திற்கும் நடந்த சம்பாஷணை அவளுக்குத் தெரிய வந்திருக்கலாம். ஆகையால் அவள் தன் மகனுக்காக நிச்சயித்திருக்கும் பெண்ணை அவன் (சிந்தாமணி) விவாகம்செய்துகொள்ளுதல் கூடாதென்றுசொல்லலாமென நினைத்தான்.

"நான் சொன்ன வார்த்தைகளினால் நீ ஆச்சர்யத்தை அடைந்தவனைப்போற் காணப்படுகிறாய். ஆனால் இந்த விஷயத்தில் நீ சங்கோசமில்லாமற் பேசுவதற்குப் பயப்படவேண்டாம். இருவருக்கும் அந்தஸ்தில் உள்ள வித்தியாசத்தைக் கருதவேண்டாம்," என்று சுலக்ஷணா சொல்லும்பொழுது அவளுடைய சரீரம் லேசாய் அசைந்தது, கன்னங்கள் சிவந்தன, மார்பு துடித்தது, கண்களில் ஒருவிதமான பிரகாசம் தோன்றிற்று.

"தாங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை," என்று சிந்தாமணி தடுமாறிக்கொண்டே சொன்னான்.

"இல்லை இல்லை, நான் சொல்வது உனக்கு நன்றாய் விளங்குகிறது. நான் சொல்லுகிறவிஷயம் இன்னதென்று உனக்குத் தெரியாம

லிருக்கமாட்டாது. ஆனல் என்னை நீ ஏன் பயந்தவனைப்போல் வெறிக்கவெறிக்கப் பார்க்கிருய்?" என்று சொல்லி நிறுத்திவிட்டாள். மறுபடியும் அவனைக் கவனமாய் உற்று நோக்கினள்.

தனக்கும் அம்புஜத்திற்கும் இருந்த நேசத்தை அவள் அறிந்து கொண்டாளென்று நினைத்துச் சிந்தாமணி சொல்லுகிருன்; "தாங்கள் என்ன காரியத்தை உத்தேசித்துப் பேசுகிறீர்களோ அது எனக்குத் தெளிவாய் விளங்கும்படி சொல்லவேண்டும்."

"இன்னும் உனக்கு விளங்கவில்லையா? நீ காதலிக்கப்படுவது உனது குற்றமல்ல. சாதாரணக் குடும்பத்தில் நீ பிறந்திருந்தபோதிலும், ஒரு பிரபுவைப்போல் இருக்கிருய் என்று நான் முகஸ்துதியில்லாமற் சொல்லுவேன். உன்னுடைய வடிவம் மிகவும் அழகாயிருக்கின்றது. ஒருபோதும் காதலையறியாத இருதயம் உன்னைக் காதலிக்கின்றது. நல்ல யூகமும் புத்திசாலித்தனமும் உன்னிடம் இருக்கின்றன. உன்னுடைய குரல் தேவாமிர்தம்போல் இனிமையாயிருக்கிறது. இப்படிப்பட்ட குணங்கள் உன்னிடத்தி லமைந்திருக்கும்பொழுது நீ ஒருஸ்திரீயாற் காதலிக்கப்படுவது ஆச்சரியமல்ல. ஆம், நீ வெகுகாலமாய்க் காதலிக்கப்படுகிருய். ஆனல் இன்றுதான் அக்காதல் வெளிப்பட்டது."

சிந்தாமணி ஆச்சர்யத்தோடு கேட்டுக் கொண்டிருந்தான். சுலக்ஷணை சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அம்புஜத்திற்குத் தன்னிடத்திலிருந்த காதலைக் குறித்ததென்று அவன் நிச்சயித்தான். இன்றுதான் அந்தக் காதல்வெளியாயிற்று என்று அவள் சொன்னது அம்புஜத்தின் விஷயத்திற்குப் பொருத்தமாயிருந்தது. ஆனல் அவள் சொன்ன வார்த்தைகளுக்கு வேறே அர்த்தமிருக்குமோ என்று யோசித்தான். அவளைக் கேட்டுச் சந்தேகத்தை நிவர்த்தி பண்ணிக் கொள்ளலாம் என்று நினைத்தான். பிழையாய்ப் பேசிவிடுவோமோ என்று பயந்தான். இவனுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. அவன் மனம் மிகவும் குழப்பமான நிலையில் இருந்தது. சுலக்ஷணைக்கும் அவன் மனதின் நிலைமை தெரிந்தது.

"சிந்தாமணி! ஏன் இவ்விதமாய் இருக்கிறாய்? என்னுடையகருத்தை அறிந்துகொண்டதனாலா?" என்று அவள் கேட்டாள்.

"இல்லை இல்லை; தங்கள் கருத்து எனக்கு விளங்கவில்லை.. நன்றாய் விளங்கும்படி சொல்லுங்கள்," என்று சிந்தாமணி சொன்னான்.

"இருதயத்தில் உண்டாகும் உணர்ச்சிகளை வெளியிட்டுச் சொல்வதற்குத் தகுதியான வார்த்தைகள் இருக்கின்றனவா? அவசியம்நான் என்வாயாற் சொல்லவேண்டும்போலிருக்கிறது. சிந்தாமணி! நான் **உன்னைக் காதலிக்கிறேன்**" என்று சுலக்ஷணு உறுதியுடன் சொன்னாள்.

அவள் கடைசித்தடவை பேசவாரம்பித்த உடனே என்னசொல்லப்போகிறாளென்பது சிந்தாமணிக்குத் தெரிந்திருந்தபோதிலும், அவள் அதைச்சொன்னவுடன் ஆச்சர்யத்தினால் கூச்சலிட்டான். அப்பொழுதுகூட அவனுக்குச் சந்தேகமாய்த்தானிருந்தது. அவன் கேட்டது சரியோ தவறோ என்றும், அவன்காது அவனை ஏமாற்றிவிட்டதோ என்றும் நினைத்தான். இரண்டு மூன்றுநிமிஷங்கள்வரை ஆச்சர்யத்தோடும் சந்தேகத்தோடும் சுலக்ஷணுவை உற்றுப்பார்த்துக்கொண்டே இருந்தான். அழகும் அந்தஸ்தும் ஆஸ்தியும் உள்ள ஒரு ஸ்திரீயாற் காதலிக்கப்படுதலாகிய நல்லதிர்ஷ்டத்தினால் அவன் பிரமைகொண்டிருக்கிறான் என்று சுலக்ஷணு நினைத்தாள்.

"ஆம், சிந்தாமணி! என்னன்பிற்குரிய சிந்தாமணி! நான் உன்னைக் காதலிக்கிறேன். கொஞ்சகாலமாய் உன்னைக் காதலித்து வந்தேன். என்னால் கூடியவரைமுயன்றும் அக்காதலை மறைத்துவைக்க முடியவில்லை. இந்த உலகம் எனது கர்வமே என்கற்பிற்குச் சாக்ஷியென்று நினைக்கிறதென்பது உனக்குத் தெரியும். நான் இதுவரை ஒருவரையும் காதலித்ததில்லையென்று கடவுள் சாட்சியாய்ச் சொல்லுகிறேன். உன்னிடத்தில் எனக்கு உண்டான காதலை அடக்க என்னாலானவரை முயன்றும், அது பிரயோஜனப்படவில்லை. இதுவரை ஒன்றுக்கும் தாழாத நான் இக்காதலுக்குத் தாழ்கின்றேன். அப்படிப்பட்ட காதலுக்குரியவன் நீ;" என்று சிந்தாமணியைக் காதல் நிறைந்த பார்வையோடு நோக்கிக்கொண்டு சுலக்ஷணு சொன்னாள்.

சிந்தாமணி பிரமைகொண்டவனைப் போல் இருந்தபடியால் அவள் தடைப்படாமற் பேசினுள். அவள் பேசுவது அவனுக்குக் கேட்டபோதிலும், அதன்கருத்து அவனுக்கு விளங்கினபோதிலும் அவன் அதை நம்பமுடியவில்லை. அவனெதிரே கம்பீரமான அழகுள்ள ஒரு ஸ்திரீ நின்றுகொண்டு அவனைக் காதலிப்பதாகச் சொன்ன போதிலும், தன் கண்ணுற்பார்க்கிறதை அவன் நம்பமுடியவில்லை. ஆகையால் அவன் அவளை ஆச்சர்யத்தோடு பார்த்துக்கொண்டு நாற்காலி யருகில் நின்றுன். அச்சமயம் அவன் உலகத்திலுள்ள எல்லாச் சந்தேகமும் ஆச்சர்யமும் சேர்ந்து ஒருருவெடுத்துவந்தாற்போற் காணப்பட்டான்.

"சிந்தாமணி! நீ ஏன் இப்படி நிற்கிறுய்? நான் உன்னைக் காதலிப்பதாகச் சொன்னது உனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கவில்லையா? தவறுன அர்த்தம் பண்ணிக்கொள்ளாதே. நான் உன்னை என் புருஷனுகும்படி கேட்கவில்லை. உன் மனைவியாகும்படி நான் இச்சிக்கவில்லை. உலகத்திற்கு நம்முடைய காதல் தெரியக் கூடாது. ஆகையால் நீ என்னை உன்னுடைய வைப்பாட்டியாக்கிக்கொள்ளவேண்டுகிறேன். உன்மேல்வைத்திருக்கும்காதலினுல் என்னுடையயோக்கியதையையும் குலமாதர்களுக்கு இன்றியமையாததாயுள்ள கற்பையும் இவ்விதமாய் இழக்க நான் தயாராயிருக்கிறேன். சிந்தாமணி! இவ்விதமான காதலை நீ மறுக்கிறுயா? உன்னுல் மறுக்கமுடியாது. நீ மறுக்கமாட்டாய், நான் விளையாட்டுக்குச் சொல்லுகிறேன் என்று நினைக்கிறுய் போலும்; அப்படியல்ல என்பதற்கு அத்தாக்ஷியாக உன்னைக்கட்டித்தழுவி முத்தமிடுகிறேன்," என்று சொல்லிக் காமம் மீறிய அந்த ஸ்திரீ சித்திரக்காரனுகிய சிந்தாமணியைத் தழுவுவதற்கு அழகிய தன்னிருகரங்களையும் நீட்டினுள். ஆனுல் அவன் வெறுப்போடும் பயத்தோடும் இரண்டு மூன்றடி பின்னே சென்று "கூடாது, கூடாது" என்று கத்தினுன்.

"என்ன! நீ என்னுடைய காதலை அவமதித்துவெறுக்கிறுயா?" என்று சுலக்ஷணு ஆச்சர்யத்தோடு சொன்னுள். அவளுடைய கர்வமும் தற்பெருமையும் அவள் தன்வாயினுற்சொன்னதை நம்பமுடியாத

படி செய்தன. " அது கூடாத காரியம். ஒருவேளை நீ இன்னும் நான் விளையாட்டுக்குச் சொல்லுகிறேன் என்று நினைக்கிறாய்போலும்; என் குமாரத்திகளுக்கு நீ சரியான உபாத்தியாயனா என்று நான் உன்னைச் சோதிக்கிறேனென்று நினைக்கிறாய்போலும்; கடவுள் சாக்ஷியாக நான் உண்மை பேசுகிறேன். என்ன! நீ இன்னும் என்னை நடுக்கத்தோடும் பயத்தோடும் நோக்குகிறாய். என்னுடைய காதலை மறுக்க உன்னால் முடியாது என்று நான் மறுபடியும் சொல்லுகிறேன். என் காதல் எப்படிப்பட்டது? அது தகித்துக்கொண்டிருக்கிற ஒருவிதமான உணர்ச்சி. அந்த உணர்ச்சியானது என்னைப் பைத்தியம் கொள்ளச் செய்கிறது. அது தன்னுடைய ஜ்வாலையால் என்னைச் சுடுகிறது. அப்படியில்லாவிட்டால் நான் ஒருபோதும் அதை வெளியே காட்டியிருக்க மாட்டேன். சிந்தாமணி! உனக்காக நான் எதைவேண்டுமானாலும் இழப்பேன். மோக்ஷமடைகிற நம்பிக்கையைவேண்டுமென்றாலும் இழக்கத் தயாரா யிருக்கிறேன். என்னுடைய காதலுக்கு அத்தாக்ஷி வேண்டுமா? நான் கர்வமும் தற்பெருமையும் உள்ள ஸ்திரீ என்பது உனக்குத் தெரியும். என் கர்வத்தையும் பெருமையையும் விட்டு உன்னுடைய காதலுக்காக நான் உன்னைத் தாழ்மையோடு கெஞ்சுகிறேன்." மறுபடியும் அவள் அவனைத் தழுவுவதற்காகக் கைகளை நீட்டிக்கொண்டுவர, அவன் கொஞ்சதூரம் பின்னாலே சென்று சொல்லுகிறான், " அம்மா, தாங்கள் தங்களையே மறந்திருக்கிறீர்களா? அல்லது தங்களுக்குப் பைத்தியமா? "

" ஆம், பைத்தியந்தான்; உன்னிடத்தி லிருக்கும் காதலாகிய பைத்தியம். நான் உன்னைப் பதிலுக்குக் காதலிக்கச் சொல்லுகிறேன். நீ தாமதிக்கிறாய். ஆனால் நீ என்னைக் கட்டாயமாய் நேசிக்கவேண்டும். நான் உன்னைக் காதலிப்பதுபோல அவ்வளவு சிரத்தையோடு நீ என்னைக் காதலிக்கவேண்டும்," என்று சுலக்ஷணை சொன்னாள்.

" நிறுத்துங்கள், அம்மா! இன்னும் ஒரு நிமிஷத்திற்குக்கூடத் தாங்கள் இம்மாதிரி பேசக்கூடாது," என்று சிந்தாமணி கோபமாய்ச் சொன்னான்.

திடீரென்று சுலக்ஷணாவின் உருவம் முழுவதும் மாறினது போல் தோன்றிற்று. அவளுடைய கன்னங்களிலிருந்த சிவப்பு நிறம் மாறி அவைகள் வெளுத்தன. அவளுடைய கண்களிலிருந்த காமத்தோடு கூடிய பார்வை மாறி அவைகளில் தீப்பொறிகள் உண்டாவது போலிருந்தது. அவள் கோபத்தோடுகூடிய குரலுடன் சொல்லுகிறாள், "அப்படியானால் நீ என்னுடைய காதலை அவமதிக்கிறாயா? புவனாலயம் ஜமீந்தாரணியை அவமதிக்க உனக்கு அவ்வளவு துணிவு உண்டாயிற்றா?"

"அம்மா! நீங்கள் அவமதிக்கப்பட்டதாய்ச் சொல்லுகிறீர்கள். நான் இங்கே இருக்கும் வரைதான் தங்களுக்கு அவ்விதமான எண்ணம் இருக்கும். நான் வெளியேபோய் ஒருவருக்கும் இங்கே நடந்த சம்பவங்களைச் சொல்லமாட்டேன். நடந்ததையெல்லாம் மறந்து விடுகிறேன். நான் போய்வருகிறேன்," என்று சிந்தாமணி சொன்னான்.

"நில், ஒரு நிமிஷம் நில்!" என்று சொல்லிச் சுலக்ஷணா சிந்தாமணியின் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள். "நீ என்னை இவ்விதமாக விட்டுச்செல்லக்கூடாது. நான் இப்பொழுது என்னசெய்வேனென்பது எனக்குத் தெரியாது. நான் உன்னைத்தவிர வேறொருவரையும் காதலித்ததில்லை. ஆகையால் நீ என்னை இவ்விதமாய் மறுக்கக்கூடாது," என்று சொல்லி அவள் கோபத்தினால் தரையில் விரித்திருந்த கம்பளத்தின்மேல் உதைத்தாள்.

சிந்தாமணி சுலக்ஷணாவின் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு கதவைநோக்கி விரைந்து சென்றான். அவள் அவன் பின்னால் ஓடி மறுபடியும் கையைப் பிடித்துக்கொண்டாள். "நில் நான் உன்னை நிற்கச் சொல்லிக் கட்டளையிடுகிறேன். நான் சொல்லவேண்டியவற்றை எல்லாம் சொல்லிமுடிப்பதற்குள், நீ தப்பியோட முயன்றால் நான் விடமாட்டேன்; சண்டையுண்டாகும், ஸ்திரீயோடுசண்டைசெய்தல் உனக்கழகா?"

"தாங்கள் சொல்வதைக் கேட்பதற்கு நான் இங்கே சில நிமிஷங்கள் நிற்கிறேன். ஏனெனிற் சச்சரவுண்டானால் இந்தவீட்டிலுள்ள

வர்களுக்கெல்லாம் தங்கள் நடத்தை வெளியாய்விடும். ஆனால் தங்களுக்குத் தாழ்மையைத் தரத்தக்கதும் எனக்கு வருத்தத்தை உண்டு பண்ணுவதுமான வார்த்தைகளைத் தாங்கள் பேசக்கூடாது. என்று சிந்தாமணி, என்னசெய்வதென்று தெரியாமல் வருத்தத்தோடு சொன்னான்.

“ உனக்கு வருத்தத்தைக் கொடுக்கின்றனவா? முட்டாட் பயலே! நம்மிருவருக்கும் வயதில் அதிகவித்தியாசம் இருக்கிறதென்று நினைத்து என் காதலை நீ மறுத்துவிட்டாயா? நம்மிருவருடைய வயதுகளில் அனேக வருஷங்கள் வித்தியாசமிருக்கின்றதென்பது வாஸ்தவந்தான். ஆனால் நான் அழகாயில்லையா? இந்த என் தலைமயிரைப் பார். ஒருமயிராவது நரைத்திருக்கிறதா? என்முகத்தைப்பார். அதில் ஒரு சுருங்கலாவது உண்டாயிருக்கிறதா? என்னுடைய உருவத்தைப் பார். சிறிதேனும் கூனியிருக்கிறதா! இல்லை இல்லை. நான் காதலிக்க பாத்திரம் செய்யவில்லை. காதலிக்கப் படுவதற்கு நான் உரியவள் ...யானவள் என்ற நம்பிக்கையை உடையவளாயும் இருக்கிறேன். என் ம... என்னவென்று உனக்குத் தெரியாதா? அதற்குத் தகுந்த லக்ஷணம் எனக்கில்லையா? மிகவும் பெருமை வாய்ந்த புவனாலயம் ஜமீந்தார் என்னைக் கலியாணம் செய்து கொண்டபொழுது நான் அதிரூபலாவண்யமுள்ளவள் என்று சொன்னது பொய்யென்கிறாயா? ஆகையால் இன்னொருதரம் சிந்தாமணி————...” என்று சுலக்ஷணா சொல்லிமுடிப்பதற்குள், “ வேண்டாம், வேண்டாம், இன்னும் ஒருதரங்கூடச் சொல்லக்கூடாது என்று சிந்தாமணி சொன்னான். சுலக்ஷணாவுடன் பேசிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் தன்னன்பான காதலியாகிய அம்புஜத்திற்குத் துரோகம்செய்வதாக அவன்எண்ணிக்கொண்டான்.

“ அப்படியானால் உன் மனம் கல்லா? இரும்பா? இவ்விதம் இளகாமலிருப்பதற்கு. ஆனால் ஒருவேளை நீ மற்றொருத்தியைக் காதலிக்கலாம்,” என்று சுலக்ஷணா சொல்லும்பொழுதே அவள் தேகமெல்லாம் நடுங்கிற்று.

"மற்றொருத்தியையா நேசிக்கிறேன்?" என்று அந்தச் சித்திரக்காரன் திருப்பிச் சொன்னான். தன்னுடைய இரகசியம் வெளியாகிவிட்டதோ என்று அவன் பயந்தான்.

"ஆம், நீ மற்றொருத்தியை நேசிக்கிறாய். நான் அப்படிச் சொன்னேன். இப்பொழுது உன் முகம் அதை உறுதிப்படுத்திவிட்டது. அப்படியானால் எனக்கொரு சக்களத்தி ஏற்பட்டுவிட்டாள். வேறு எவளுக்காகவாவது நீ என்காதலை மறுத்தால் நான் உன்னைச் சும்மா விடமாட்டேன். நான் வாங்கும் பழி மிகவும் கொரேமாயிருக்கும்," என்று சுலக்ஷணா உடனே பதில்கூறினாள்.

"தாங்கள் என்ன சொல்கிறீர்களென்பது தங்களுக்கே தெரியவில்லை," என்று சிந்தாமணி அம்புஜத்தை நினைத்துக்கொண்டு சொன்னான்.

"செய்யப் போகிறதைத்தான் நான் சொன்னேன். உஷார். இன்னும் என் காதலை மறுக்கிறாயா? அன்பான வார்த்தை ஒன்று சொல். இதுவரை நடந்ததையெல்லாம் மன்னித்துவிடுகிறேன்," என்று மிகவும் கோபத்தோடுகூடிய அந்த ஸ்திரீ சொன்னாள்.

"அம்மா, இனிமேல் என்னாற் பொறுக்கமுடியாது," என்று சொல்லி அவன் அவளிடத்திலிருந்து மறுபடியும் திமிறிக்கொண்டு போனான்.

"நில்" என்று சொல்லி மறுபடியும் அவன் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு சுலக்ஷணா சொல்லுகிறாள், "நான் இன்னும் ஒருவார்த்தைதான் உனக்குச் சொல்லவேண்டும். என்னுடைய காதலை நீ அங்கீகாரம்செய்துகொள்வாயானால்; உன்னைக் கடவுளைப் போற் பாவித்து நான் உனக்குத் தொண்டூழியம் செய்வேன். ஆனால் என்காதலை மறுத்தாயானால் என்னுடைய கொடிய விரோதியாக நான் உன்னைப்பாவிப்பேன்."

(இன்னும் வரும்)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

உ

நமது தற்சமயவேலை.

ஸஹோதர ஸஹோதரிகளே!

நமதிந்தியாவின்பெருமை அளவிற்குள்ளடங்கியதல்ல. இதன் அருமை அறிவுக்கெட்டியதல்ல. இதின் உரிமை யுக்திக்குட்பட்டதல்ல. எந்தப் படையும் இதைப் பிளக்கமுடியாது. எந்தக்கத்தியும் இதைஅறுக்க இயலாது. எந்தச் சங்கமும் இதைக் கலக்கமுடியாது.

இத்தகைய இந்தியா முன்னே ஏறியிருந்த உத்தமமான நிலையைக்கவனிக்க, எவ்வளவு பொறுமை மேலிட்ட நெஞ்சேயாயினும் அதற்கும் இன்பம் பெருகிவரத்தான்வரும். இதன் பழைய உன்னதத்தாலன்றோ மாமுனிகளும்ரிஷிகளும் இதைப்பற்றி எத்தனையோ காவியங்களை எழுதினர்கள்; தற்காலத்திய யோகிகளிற் சிலரும் இதைத் துதித்துத் துதித்து மனமுருகுகின்றனர். இது இப்பொழுது தளர்ந்திருக்கும் நிலையைக் கொஞ்சம் ஊகித்துப்பாருங்கள். ஒரு குறைவுமின்றி ஓங்காரத்தில் லயித்திருந்த இதன் பலகோடி மித்திரர்களிற் பலரும் தற்சமயம் பசியால்வருந்தும் பரிதாபகரமான நிலையைச் சற்றே எண்ணிப்பாருங்கள். தற்காலம் இது முன்னேறிவரும் காலசக்கர ஓட்டத்தையும் கவனித்து நோக்குங்கள்; இந்நிலையேற்றத்திற்கு உங்களாற்செய்ய இயலும் தொண்டூழியத்தைப்புரிய இமையளவு நேரமும் தாமதமின்றி முன்வாருங்கள்.

அந்தோ! பாரததேவியின் புத்திரபுத்திரிகளிற் பலரும் பிணியால் வருந்துகின்றனர். ஆரியச்செல்வர்கள் வீரியதரித்திரர்களாய்க் கலங்குகின்றனர். உலகெலாம் ஆண்டுவந்த உத்தமகுணத்தோர் தற்காலம் தங்களுடைய சுதேசஆட்சிக்கே பாடுபடுகின்றனர். இது காலத்தின் கோலம்போலும். இக்கோலத்திலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? இந்தியதேசம் சீர்திருத்தத்தைப் பெறவேண்டும். இழந்தஉரிமைகள் மறுபடியும் உண்டாகவேண்டும். வறுமைநீங்கவேண்டும். ஆட்சி ஆதரிக்கப்படவேண்டும். ஆண்மை உலவிவர

வேண்டும். உண்மை உற்பவித் தெழுந்திடல்வேண்டும். இவ்வேலை ஒருபக்கம் உலாவுகிறது. இதற்குப் பலநேயர்கள் உழைத்துவருகின்றனர். இது மிகவும் சிரமமான காரியந்தான். என்றாலும் முயற்சியுடையார் இகழ்ச்சியடையாரல்லவோ. எனினும் இசைந்தகாற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளல்வேண்டும். இது நிற்க.

நமது மதத்தின்மகிமை வெளிவரவேண்டும். இந்துமதத்தின் தனிச்சிறப்பைப் பலரும்அறியவேண்டும். ஆரியமதத்தின் அருமையறிந்து அனைவரும் ஆனந்திக்கவேண்டும். பக்திமார்க்கம் செழித்தோங்கவேண்டும். யோகமார்க்கத்தின் உண்மைக்கருத்தை உலகெலாம் தெரிந்திடல் வேண்டும். நமதுபழமை வெளிவரவேண்டும். எங்கும் நிறைந்து ஏகமாய்த்துலங்கும் ஸர்வேசனுடைய அநுக்கிரகத்திற்கு ஆளாய் நமெல்லோரும் தியானஞ்செயல்வேண்டும். பிறப் பிறப்பை ஒழிக்கவேண்டும். பிறப்பையே எடுத்தாலும் அருளாய்த் துலங்கவேண்டும். இதுவே நமது தெய்விகவேலை. இது ஓர்பக்கம் ஒளிவீசுகின்றது.

தற்சமயம் இரண்டும் நமக்கு அவசியமான காரியங்களே. முதலாவதோ, ஒருவிதமாய் நடந்துவருகிறது. இயன்றமட்டும் உழைப்பும் ஏறிவருகிறது. விருத்தியம்சத்தின் விளக்கம் ஈசனே அறிவான்; அல்லது கூடியசீக்கிரத்தில் எல்லோருக்கும் தெரியவரும்.

இரண்டாவது காரியத்திற்கோ, நமது தலைவரெங்கே! உடலைச் சீயென வெறுத்துப் பரமேசனுடைய தியானத்திலேயே காலம்முழுவதையும் கருத்தோடு செலுத்திவரும் காருண்யசீலரெங்கே! பொருளாசையை முழுதும் துறந்து பேரின்பப் பொருளானந்தத்திலே நீந்தும் போகரெங்கே! அகம் அற்றவராய் நிஷ்டை யுற்றவராய்ப் பற்றைவிட்டவராய்ப் பிரம்மானந்தத்திலே பிரகாசிக்கும் நமது நாதரெங்கே! எங்கே எங்கே என்று ஏகாக்கிரமாய்த் தேடுவோம். இங்கே இங்கே என்று இன்பமாய் வெளிவருவார்.

டி. வி. வேங்கடராகவலு,
டீச்சர், மாடல்ஸெக்ஷன்,
புதுக்கோட்டை.

இந்திய தேசாந்தரி.

பத்திராதிபர்: தி. கே. சுவாமிநாதன்.

A Tamil Edition of the 'Indian Emigrant'

MADRAS.

வெளிப்ரதேசங்களில் குடியேறியிருக்கும் இந்தியருடைய வியாபாரம் முதலியவற்றையும், அவர்களுக்கு வேண்டிய சீர்திருத்தங்களையும், ஆங்காங்குள்ள கூலியாட்களுடைய குறைகளையும், அவைகளை நிவர்த்திசெய்யும் வழிவகைகளையும், நன்கு விளக்கும் ஒருமாதாந்தப் பத்திரிகை.

வருஷசந்தா (தபாற்கூலிஉட்பட)

உள் நாட்டுக்குரூ 3–0–0. வெளி நாட்டுக்குரூ 3–12–0 (5-ஷிலிங்)

சென்னை

14, பேக்கர் தெருவு.

இந்திய தேசாந்தரி.

நம்மில் அநேகர் இப்பொழுது பற்பல தேசங்களிற் சென்று உழைத்து ஜீவனஞ் செய்து வருகின்றார்கள் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். அவர்கள்நிலைமை எவ்வாறிருப்ப தென்பதையும், அதை எவ்வழிகளில் சீர்திருத்தலாமென்பதையும் நாம் கவனிக்காதிருந்தால் அவர்கள் ஸ்திதி இப்பொழுது இருப்பதைவிடப் பதின் மடங்கு அதிகமாய்ச் சீர்குலைந்துவிடும் என்பது திண்ணம். இத்தருணம் நமது இந்தியர்கள் அநேகர் பிரித்தானிய சக்ராதிபத்திய

நாடுகளிலும் அன்னிய நாடுகளிலும் குடியேறி யிருக்கிறார்கள். அவர் நிலைமை, பிரித்தானிய சக்கிராதிபத்தியத்திற்கும், நமது நாட்டின் கௌரவத்திற்கும், சுயமரியாதைக்கும், மனுஷத்தன்மைக்கும் இழிவைக்கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. ஜனங்கள் சாதாரணமாய்த் தமதுவகுப்பைச்சேர்ந்தவர்களின் அபிவிருத்தியைக் கோரினவர்களாயிருப்பது இயற்கை. அதிலும் வெளிப்பிரதேசங்களிற்போய்த் துன்பப்படும் பேதைகளிடத்தில் அநுதாபப்படுவது ஒவ்வொருவனுடைய இயற்கைக்குணம். பாமரஜனங்களும் இவ்வித நேசத்தையும் தயையையும் காட்டுவார்கள். அப்படியிருக்க நாகரிகமடைந்தவர்களென்னும் புகழ்வேண்டும் நாம் அவர்களின் ஸ்திதியை நிவர்த்திசெய்யும்வழிவகைகளைத் தேடாதிருந்தால் நாகரிகமடைந்தவர்களென்று ஒருவரும் ஏற்றுக்கொள்ளார்.

இந்த நோக்கத்தை உத்தேசித்தே 1914-ம் ஆண்டு முதலாக "இந்திய தேசாந்தரி" என்னும் ஆங்கில மாதாந்தப்பத்திரிகையொன்று நடத்திவந்தோம். இந்திய தேசாந்தரிகளின் நலத்திற்கானவற்றை இன்னும் பூரணமாக நாம் கற்றுக்கொள்ளும்படியும், நாமே அவர்களின் ஸ்திதியை நேரேபார்க்கும்படியும் இலங்கை சிங்கப்பூர் முதலிய இடங்களில், பிரயாணம் செய்தபோது அநேகர் கேட்டுக்கொண்டபடி தமிழிலேயும் இந்த "இந்தியதேசாந்தரி என்னும் பத்திரிகையை மாதந்தோறும் நடத்திவரலாமென உத்தேசித்தோம். அப்படியே 1918-ம்ஆண்டு ஏப்ரல்மாதமுதல் தமிழ்ப்புதுவருஷத்துக்காக நடத்தப்படுவதற்கு அறிகுறியாகவும் மாதிரிப் பிரதியாகவும் இதைப் பிரசுரம்செய்கிறோம். சுய அபிமானமுள்ள தாய் தந்தை சகோதரர்கள் நல்ல ஸ்திதியிலிருப்பவனிலும் வறுமை, பிணி தண்டனையுற்ற பந்துவில் அபிமானம் மிகுதியும் வைக்கின்றார்களல்லவா? அப்படியே நாமும் இந்தியமாதாவின் புத்திரர்களாய் நமது சகோதரர்களாயுள்ளவர்கள் அன்னியநாட்டில் வயிற்றைமாத்திரம் நிரப்பும்நோக்கமாகவிருந்து படும் கஷ்டங்களைக்கவனித்து அவர்களை அதினின்றும் விடுவிக்கமுயன்றாலல்லவோ மனுஷ்ய ஜன்மமெடுத்ததற்குப் பலனடைவோம். அப்படி நாம் எத்தனிக்கும்வரை இந்தியா

ஒரு தேசமாகவும் நாம் ஒரு ஜாதியாராகவும் மதிக்கப்படமாட்டோம் என்பதை யாரும் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

இதற்காக உலகத்திலேயுள்ள எல்லா ஜாதியார்களும் அன்னிய நாட்டிலே குடியேறி யிருப்பவர்கள் நலத்தின்பொருட்டுக் குடியேறியநாட்டிலும் சுயநாட்டிலும் சபைகளையும் சங்கங்களையும் பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் ஏற்படுத்தி வருகிறார்கள். நமதுவகுப்பார்மாத்திரம் யாதுகாரணத்தாலோ இவ்விஷயத்தில் ஊக்கம் குறைந்தவர்களாகவும் உறக்க முற்றவர்களாகவும் இருக்கிறார்கள். ஒருகால் மறைபொருள்களை மறந்திருப்பது சகஜமானதினால் நம்மவர்கள் நமது சகோதரர்களாயும் பரதேசவாஸிகளாயு முள்ளவர்களை மறந்துவிட்டார்போலும்?

இந்தவிதமான இந்தியமாதாவின் புத்திரர்கள் அன்னிய தேசத்திற்குப் போகும் பிரயாணத்திற் கடலைத்தாண்டும்போது படும் கஷ்டமும், சேருத்துறைகளிற்படும் துன்பமும், அன்னியவூரிலிருக்கும் நிர்ப்பந்தஸ்திதியும், தமது பெருமை, உரிமை, கடமை, முதலியவற்றை அறியாமையால் அடையும் கேவலமும் நமக்குச் சகிக்கமுடியாதனவா யிருக்கின்றன. அவர்கள் திரும்பிவரமுடியாதவர்களாகச் சிலவேளை இருப்பதும், திரும்பிவந்து தேகபலமின்றியும் வறுமை யெய்தியும் உயிர்துறப்பதும் யாருக்குத்தான் தெரியாத விஷயம். கீழைதேசத்தில் நாகரிகமுற்ற சைனா ஜப்பான்காரர்களும், மேலைத்தேசத்தில் நாகரிகமுற்ற ஆங்கிலேயர்களும், அன்னியதேசத்திற்போய்க் கேவலமடைந்தாவது அல்லது பிரயோசனமடையாமலாவது திரும்பியுள்ளாரென்று நாம் சொல்லக்கேட்டதில்லை. அதனால் அல்லவோ ஆங்கிலேயர்கள் பலவிடங்களிலும் சிறப்புற்றோங்கியிருப்பதும் தவிர அன்னியவூர்களின் ராஜ்யபாரத்தையும் தாங்கும் சாமர்த்தியத்தையும் அடைந்திருக்கிறார்கள். இவ்விஷயமாக அதிக விவரங்களைப் படிப்படியாகவன்றி ஒரே முறையில் எழுதுவது படிப்பவர்களுக்கு மலைப்பைக்கொடுப்பதன்றியும் எமது கருத்தும் மறைபடும். இதையே முறைப்படி இந்தியதேசாந்தரியில் விவரிப்போம். தேசாந்தரிகளின் ஸௌகர்யங்களும் அவர்களைச்சார்ந்த பலவிதவிஷயங்களும் பொதுநன்மைக்கிணங்க எமது சஞ்சிகைகளில் எழுதப்பெறும்.

வேறு பிரதேசங்களிற் குடியேறிய ஜனங்கள் எவ்விதத்தில் நன்மை அடையலாம். எவ்விதத்தில் தம் தம் நன்மையைமட்டும் கருதாது பிறர்க்கு உபயோகமாயிருக்கலாம். எவ்விதத்தில் உலகத்திற்குப் பயன்படுமாறு பற்பல கைங்கர்யங்களை நிறைவேற்றலாம் என்பதை எமதறிவிற்கேற்றவாறு விஸ்தரிப்போம். இதை வெவ்வேறு தேசங்களிற் குடியேறிய தமிழ்ஜனங்கள்படித்து மென்மேலும் விருத்தியடைய வேண்டுமென்பதே எமது கருத்து.

ஏற்கனவே பீஜித்தீவுகளினின்று அனேகர் இப்பத்திரிகைக்கு உதவிசெய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மற்றை நாடுகளினின்றும் அனேகர் இதனை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

௨

விடுகதை வினாவுக்கு விடை.

வித்யாபாநுவின் பத்தாங்கொகுதியின் (பிங்களவருஷமாசிமீப் பகுதி) ௯௪ம்பக்கத்திலுள்ள விடுகதை வினாவுக்கு விடை வருமாறு.

I. ஆத்திசூடி.

அரசினர்கலாசாலை
பொன்னமராவதி,
20—3—18.

R. சீதாராமன்.
3-வது வகுப்புமாணவன்.

II. தேசஞ் செழிக்கத் திருவவதாரஞ்செய்து
மாசிமதி வந்தகலை மாதேநீ—நேசமுடன்
பாடியசுப் பையா பதிலுணர வேயாத்தி
சூடியெனத் தைரியமாய்ச் சொல்.

T. S. நடேசன்,
கண்டரமாணிக்கம்.

III. அக்கரமைந்தும் ஆத்திசூடியே யாகும்
அதிற்கடை யிரண்டகன் றிடுமேல்
நக்கனா ரணியுங் கொன்றையே யாகும்
நடுவண்மூன் றெழுத்தகன் றிடுமேல்
தொக்கசீராடித் திங்களே யாகுந்
தொடர்கடை நான்ககன் றிடுமேல்
தக்கபேரிரக்கத் தாகார மென்னச்
சாற்றுறுந் தகையலா முணர்வீர்.

சண்முகநாதன்,
பலவான்குடி.

IV. ஆத்திசூடி... ஐந்தெழுத்துப்பதம்.
ஆத்தி... நக்கனர் சடையிலணியும் பொருள்.
ஆடி... ஓர் மாதம்.
ஆ... இரக்கக்குறிப்பு.

பழ. அண்ணாமலை,
அரிமழம்.

சபைநிகழ்ச்சிக்குறிப்பு.

நாட்டரசன்கோட்டை
வித்யாபரிபாலனசங்கம்.

மாசிமாதக்கூட்டம்.

1918ஞு மார்ச்சுமீ 9உ சனிக்கிழமை மாலை 6மணிக்கு ஷை சங்கத்தின் 11-வது மாதக்கூட்டம் நடைபெற்றது. நாட்டரசன் கோட்டை வித்வான் பிர்ம்மஸ்ரீ சீதாராமையங்காரவர்கள் அக்ராஸனம் வகித்தனர். வித்யாபாநுப் பத்ராதிபரும், கம்பராமாயணப் பிரசாரகரும் ஆகிய காரைக்குடி பிர்ம்மஸ்ரீ கோவிந்தராஜ ஐயங்காரவர்கள் கம்பராமாயணத்துக் கையடைப்படலத்தை மேற்கொண்டு சபையோர் மனம் கொள்ளுமாறும் கற்றோர் உவக்கவும் நுண்பொருளடங்கிய ஆராய்ச்சியுடன் கற்பனைநயங்காட்டிப் பற்பல மேற்கோள்களை எடுத்தாண்டு எளியசெந்தமிழ்நடையில் இனியசொற்களால் உபந்யாஸம் செய்தார்கள். இரவு 9 மணிவரையும் சபை நடைபெற்றது.

சாஸ்திரக்குறிப்புகள்.

சிலர், 'சந்திரனை உலகின் சீதோஷ்ணநிலைமை மாற்றப் பிரயத்தனம்செய்யும் ஒரு கருவி' யென்று நம்புகிறார்கள். "பூர்ணசந்திரன் மேகங்களையுட்கொள்ளுகிறது" என்று கப்பலோட்டிகளும் சொல்லுகிறார்கள். ஸர் ஜான் ஹேர்சேல் என்பவரும் "மேககாரணம் மறைவதற்குப் பூர்ணசந்திரனே கருவியாயிருக்கிறது என்று காலக்குறியறிநூல்களில் உண்மை காணப்படுகின்றது" என்று குறிக்கிறார். ஆனால் அவரது முடிவான அபிப்பிராயமிதுதான் என்று நம்புவதற்குத் தக்க ஆதாரங்கள் காட்டப்பெறவில்லை.

ஒழுங்கான கவனத்தைச் செலுத்தினதிலிருந்து, "சந்திரன் இடிமுழக்கத்துடன் புயல்கள் தோற்றத்திற் சிறிது விளையாட்டைச் செய்கிறான்" என்ற ஒரு முடிவுக்குவரலாமென்று தோன்றுகிறது. இது பூர்ணசந்திரனையொட்டிய சில நாட்களையும் அமாவாசையையொட்டிய சில நாட்களையும் நிதானமாகக் கவனிப்பதிலிருந்து நன்கு விளங்குகின்றது.

"மாலையில் வானம் சிவந்திருந்தாற் காலசுபாவம் நல்லதென்றும், காலையில் வானம் சிவந்திருந்தால் காலசுபாவம் கெட்டதென்றும்" சொல்லுகிற வழக்கமிருக்கிறது. இந்த ஸாதாரணமான பொதுஜன வழக்கில் எத்தனையோ உண்மைக்கருத்துகள் உள்ளடங்கியிருக்கின்றன. சூரியவெளிச்சம் எப்போதும் வெளுப்பாகவேயிருக்கக்கூடியதொன்று. அந்தவெளிச்சம் காலையிற் சிவந்து காணப்படுவதால் இடையிற் சில மாறுபாடுகள் நேர்ந்திருக்கவேண்டும் என்பதை நன்றாய் ஊஹிக்கலாம். என்னவெனில்:— சூரியனது ஆதிகிரணங்களில் உள்ள வெண்ணீலமான ஒளிகள் பூமிக்கு வரும்போது இடையிற் குறுக்கிட்ட காற்றுகளாற் சிதறடிக்கப்பட்டோ அல்லது அந்தக் கிரணங்களைச் சுற்றியுள்ள காற்றிலிருக்கும் சிறு தூள்களாலும் நீர்த்துளிகளாலும் கலக்கப்பட்டோ இருக்கவேண்டுமென்று நன்றாய் ஊஹிக்கப்படலாமென்றும் தோன்றுகிறது.

R. A. Gregory.